[illegible]

[illegible] 10 [illegible] 5

Jan 1937

[illegible]

[illegible], N27 SN

N37:10:5

186957

40 REGD NO. M. 3460.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கம. } பலவான்குடி தாது—மார்கழி } திங்கள் ரு.


| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | மன்னர்க்கும் வரம்புண்டு ... | 101 |
| 2. | தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தலை... ... | 105 |
| 3. | நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும் ... | 113 |
| 4. | சிவநேசன் வாழ்த்துமாலை ... | 119 |
| 5. | சிவநேசனுக்கு வாழ்த்து | 120 |
| 6. | சைவ விரத அனுட்டானம் | 121 |
| 7. | திருமுறைப்பாராயணம் ... | 122 |
| 8. | சௌரமானத்திற்கு ஆதாரம் ... | [illegible] |
| 9. | கந்தபுராணம் காப்புச் செய்யுளின் உரைவிளக்கம் | 124 |
| 10. | கூர்பேறும் மாப்பறவை (ஓர் ஆராய்ச்சி) ... | 125 |
| 11. | மாப்பறவை வண்டினம்: காகம் அல்ல; பருந்தல்ல. | 126 |
| 12. | குறுந்தொகை 75-ம் செய்யுள் உரையின் ஐயப்பாடு | 127 |
| 13. | சுலோக பஞ்சக விஷயம் | (69—76) |


OFFICE OF ... 6 - JAN 193...

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— குமார விநாயகர் திருக்கோயிலில் மார்கழி ௰௨ உ தொடங்கி திருவெம்பாவை பூஜையும், கசஉ நடராஜாபிடேகமும் தெரிசனமும், திருவுலாவும் சிறப்பாகச் செய்யப்பெற்றன. அன்பர் பலர் வந்து தெரிசித்தின்புற்றனர்.

திருத்தென்குடித் திட்டை:— தேறினர் வழிபடுவார் திருக்கோயிலில் கார்த்திகை மாதச் சோமவார உபயங்கள், 1. வை. முத்தைய பிள்ளை; 2. குளமங்கலம் சாமியப்பா பிள்ளை; 3. ஷையூர் தனுக்கோடியா பிள்ளை; 4. பூக்குளம் S. P. கோவிந்தசாமி பிள்ளை ஆகியதிருவாளர்களாலும், திருக்கார்த்திகை உபயம் கோ. இராஜகோபால மூவரையாலும், மார்கழிமாதம் கசஉ நடராஜாபிடேகமும் திருவாதிரைத் தெரிசனமும் அகரமாங்குடி உயர்திரு, பிரஹணதார்த்திரிஹர ஐயர் குடும்பத்தினராலும் நடைபெற்றன. திருப்பள்ளி எழுச்சி ஆராதனை குளமங்கலம் திரு, சாமியப்பா பிள்ளையவர்களால் நடைபெறுகின்றன.

காரைக்குடி:— நாகநாதபுரம் சிவல்கோவிலில் திருமுறைத் திருவிழா நடைபெற்றது. கார்த்திகைமீ கருஉ சோமவாரம் மாலை விநாயக சுப்பிரமணியர் பிரகந்நாயகி சமேத நாகநாதசுவாமி முதலான மூர்த்திகட்கும் சமயாசாரிய சுவாமி நால்வர்கட்கும் சிறப்பாக திருமஞ்சன திவ்யாலங்கார திருஆராதனைகளும் சோமசேகர சுவாமியுடன் தேவாரத் திருமுறையை மேளவாத்திய முழக்கத்தோடு பிரகாரத்தில்திருவுலாவும், திரு, வைத்தியநாததேசிகரவர்களால்தேவாரத் திருமுறை பூர்த்தியும் மீட்டும் ஆரம்பமும் செய்யப்பெற்றன. இவ்வுயரிய கைங்கரியத்தைப் பல ஆண்டுகளாகப் பெரும் பொருள் செலவிட்டுச் சந்நிதானத்தில் நித்தியபாராயணமாக நடாத்திவரும் சிவநேசப் பெருஞ்செல்வர் பழ. செ. மு. முத்துக்கருப்பன் செட்டியாரவர்கட்கு எல்லாம் வல்ல இறைவர் யென்மேலும் அஷ்ட ஐஸ்வரியங்களையும், சிந்திதமனோரத சித்தியையும், நீண்ட ஆயுளையும் அளித்து இத்தேவார பாராயணம் விருத்தியுறச் செய்வாராக. என திரு, அ. நடேச தேசிகர் எழுதுகிறார்.

மோகூர்:— மதுரை மேலூர் கற்சாலையில் மதுரையிலிருந்து ஆறுவது மைலிலும் மேலூரிலிருந்து பனிரண்டாவது மைலிலும் கூடும் இடமாகிய ஒத்தக்கடை யென்னும் ஊரிலிருந்து திருவாதவூருக்குச் செல்லும் கற்சாலையில் ன்றுவது மைலிலுள்ளதும், ஆள்வாராதியரால் மங்களாசாசனம் பெற்றதமான இத்திவ்ய க்ஷேத்திரத்தில் கார்த்திகை உகஉ திருஅத்தியயனஉத்ஸவம் தொடங்கி மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி வைபவத்துடன் இராப்பத்து உத்ஸவம் தொடங்கி மார்கழி யஉ வரை நடைபெற்றன. தர்மகர்த்தாக்களும் காரியதரிசிகளும் சிரத்தையுடன் செய்வித்தனர்.

கண்டாச்சிபுரம்:— போர்டு ஆண்பாடசாலைக் கட்டிடத்தில் பெற்றோர் சங்கம் டிசம்பர் 16உ காலை 9மணிக்கு நாட்டாண்மை, திரு, நா. ச. குப்புசாமி முதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவ, மாணவிகள் கடவுள் வாழ்த்துப் பாடினர். உதவியாசிரியர் திரு, வியாசராவ் அவர்களை வீரபாண்டிக்கு மாற்றியிருப்பதால் அவர்பிரிவுக்குத்தலைவரும் தலைமையாசிரியர் திரு, கோதண்டராமையரவர்களும் ஏனைய ஆசிரியர்களும் பரிவு கூறினர். திரு, வியாசராவ் அவர்கள் நன்றி பாராட்டினர். அவர்கட்கும் தலைவர்க்கும்மாலைசூட்டப்பெற்றது. ஆறும் சார்ஜ் மன்னர்க்கு வாழ்த்துக் கூறி இனிது நிறைவேறியது.

குன்றக்குடி:— ஆறுமாமுகத்தண்ணலார் தைமீ சஉ தொடங்கித் திருவிழாக் கொண்டருளுவர். கஉஉ தேரோட்டமும், கஈஉ தேனாற்றில் தீர்த்தவாரியும் பழகியாயூருணி மண்டபப்படியும், எறுதழுவுதலும் நடைபெறும்.



NL27SN
M27 10

# சைவ விரத அநுட்டானம்.

(திருவல்லிக்கேணி, வேதாகமோக்த சைவசித்தாந்த சபைக்காரியதரிசி
திரு, நல். கண்ணப்ப முதலியார் அவர்கள்)

உலகில் ஒவ்வொரு மதத்தினரும் தாங்கள் வழிபடும் கடவுளைக் குறித்து விரதம் அநுட்டிப்பது வழக்கம். திருநீறு தரித்தவர்களெல்லாம் சைவர்களென்றும், திருமண் பூசுபவர்களெல்லாம் வைணவர்களென்றும் உலகோர் அபிப்பிராயம். உண்மையைக்கூறுமிடத்து சைவர்களுக்குள்ளும் வைணவர்களுக்குள்ளும் ஏனையமதங்களுள்ளும் பலஉட்பிரிவுகள் உண்டு. சைவத்தினுள் சைவம், காணாபத்யம், கௌமாரம், சாக்தேயம், பாசுபதம், மாவிரதம், காபாலம் முதலிய பல பிரிவுகளுள்ளன. "பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே யோர்விருத்தப் பாதிபோதும்" என்று பாராட்டப் பெற்றுள்ள, சிவஞான சித்தியாரில் பல உட்பட்ட சைவர்கள் இலக்கணம் பரக்கக் காணலாம்.

இத்தாது வருஷத்தில் நிகழ்ந்த விநாயக சதுர்த்தி, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், மாதவாரி கிருத்திகை, பிரதோஷ முதலிய சைவ விரதங்களெல்லாம் இருதிறப்பட்டும், முத்திறப்பட்டும், பலதிறப்பட்டும் நிகழ்ந்தன. காரணம் பஞ்சாங்கங்களெல்லாம் தங்கள் தங்கள் மதப் போக்குக்கு மாறுபடாத வண்ணம் கணிக்கப்படுகின்றன. சைவர்கட்கென ஓர் பஞ்சாங்கம் ஆகமம் தெரிந்தார் வெளியிடுவார்களாயின் இத்தகைய விபரீதங்கட்கு இடமின்று. சில வருடங்களாக வெளிவரும் சைவப் பஞ்சாங்கமும் தெளிவித்திலது.

சைவர்கட்குரிய எந்த விரதமாயினும், திதியாயினும், நட்சத்திரமாயினும் சூரியோதயமாய் உகூவ நாழிகைக்குமேல் (மாலை சஇ மணிக்குமேல்) பிரதோஷம் என்று சொல்லப்படுகிற ரஜனிமுக வேளையில் அதாவது சாயுங்காலம் மஞ்சள் வெய்யிலுள்ள காலத்திருக்குமாயின் அந்தத் தினத்தையே சைவர்கள் விரததினமாகக் கொள்ளவேண்டும். காலையிலில்லையே உச்சிப்போதிலில்லையே விரதமநுட்டிக்கும்போது, திதியோ, நட்சத்திரமோ இல்லையே யென்கிற ஏக்கம் சிறிதும் கூடாது. இது சைவர்கட்குரிய பொது விதியும் சிறப்புவிதியுமாகும். விவரம் ஆகமங்களிற் காண்க. சைவ சமயாசாரியர்கள் முத்தித் திருநட்சத்திரங்கள் ஒரு மாதத்தில் இருமுறை வருமாயின் பின்னர் வருவதையே யநுட்டிக்கவேண்டும். சிராத்தம் செய்வதற்கும் இவ்விதியே சாலும். சைவரல்லாதார்க்குப் பொருந்தாது. எந்த விரதமும் பிரதோஷ வேளையில் இருத்தல்வேண்டும். இது சத்தியம். கடற்கரையோரங்களிலுள்ள சிவாலயங்களில் திதியே பிரதானமென்று ஆகமப்பிரமாணங்களுள. ஏனைய சிவாலயங்களில் நட்சத்திரமே பிரதானம்.

186957

## திருமுறைப் பாராயணம்.

ஆன்மார்த்தபூசையெழுந்தருளப்பண்ணமுடியாதசைவர்கள், திருமுறைப் பாராயணமேனுஞ் செய்தல்வேண்டும். திருமுறைகட்குச் சோடசோபசார பூஜைவிதிக்கப்பட்டுள்ளது. அசுபகாலத்தில் உடையவர்பூஜை திருமுறைப் பாராயணம் கூடாது என்பது ஒரு சாரார் கொள்கை. ஸ்ரீமத் அப்பர் சுவாமிகள் ''நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்'' என்று அருளிச் செய்திருக்கிறார். ஆனபடியால் சுபத்திலும் அசுபத்திலும் அத்தியயனம் செய்தல் சாலும்.

நமது பூர்வீக தமிழரசர்கள் காலத்திலிவ்வாறு நடந்திருக்கிறது என்பதற்குச் சென்னை, சர்வகலாசாலையாரால் (Madras University) B. A. பரீட்சைக்குப் பாடபுத்தகமாக ஏற்படுத்திய புத்தகத்துக்கு (Tamil Text Part II. B. A. Degree Examination 1936) உரைகண்ட வித்வான், திரு, R. S. சர்மா அவர்கள் இற்றைக்குச் சுமார் 870 வருஷங்கட்கு முன் அரசாண்ட, ''தஞ்சை ராஜராஜேந்திர சோழன் கடாரம், ஆவா, சீயம் முதலான நாடுகளைக் கைக்கொண்டு முடிசூடும் காலத்தில் தோடுடைய செவியன்—கூற்றாயினவாறு—பித்தாபிறைசூடி—மட்டிட்ட புன்னை என்னும் முதலடிகளையுடைய தேவாரங்கள் பாடப்பெற்றன. இத்தேவாரப் பதிகங்கள் கிரந்த அட்சரத்தில் எழுதி அங்குள்ளசரஸ்வதி அம்பலங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன'' என்று எழுதி யிருக்கின்றனர். இதனால் திருமுறைப்பாராயணம் புராதனமாகக் கையாண்டு வந்திருப்பது புலனாம்.

## சௌரமானத்திற்கு ஆதாரம்.

(கீரைற்றுக்கடவு சிவஸ்ரீ K. P. சுப்பிரமணிய சிவாசாரியார் அவர்கள்)

நிகழும் தாதுவருடம் புரட்டாசி ஐப்பசி மாதத்தில் வெளியான சிவநேசன் 66-ம் பக்கம் ''விநாயகசதுர்த்தியாதியவிரதநிர்ணயம்'' என்னும் தலைப்பின்கீழ் குறித்துள்ள முக்கிய விஷயங்களாவன:—

(1) நாவராத்திரி பெயராலேயே சூரியன் மறைந்தபின் செய்யப் படுவதால்திதிசம்பந்தமான விரதாதிகள் சாந்திரமானப்படியே அனுட்டிக்க வேண்டும் என்றும்,

(2) இருமாதங்களும் கொள்ளற்பாலவே என்றும்,

(3) ஆவணி மாதத்தையே முதலாகக்கொண்டு சாந்திரத்தை அனுட்டித்தல் வேண்டும் என்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(இதன் ஆராய்ச்சி)

நிகமக்ஞாந சிவாச்சாரியார் இயற்றிய சைவ கால விவேகம் 80-ம் பக்கத்திலும், சோமசம்பு சிவாச்சாரியார் இயற்றிய சிவராத்திரி நிர்ணயம் 35-ஆம் பக்கத்திலும், [illegible] முகூர்த்த நிர்ணயப்படலம் 70-ஆம்



பக்கத்திலும், சௌர சாந்திரமானங்களை உத்தமம், மத்திமம் என வகுத்தும், ஸ்தூலம், சூக்குமம், காரணம் எனவகுத்தும் சாந்திரமானத்தை சூக்குமத்திலும் மத்திமத்திலும் ஒதுக்கி, ஸௌரமானத்தை உத்தமமாயும் காரணமாயும் வகுத்து ஸௌரமானமே ஸர்வ கர்மாக்களுக்கும் உரித்தாமென்று நிர்ணயித்திருக்கின்றன. பின்னும் சைவர்கட்கும், ஆலயங்கட்கும் ஸௌரமானமே கொள்ளத்தகுவது, அன்னியர்கள் சாந்திரமானம் கொள்ளத்தகுவது. என்று விவரித்து சித்தாந்தம் செய்திருந்தும் வழிநூற் பெரியாரது கருத்துக்கும், முதனூற் பிரமாணங்கட்கும் முரணாகச்சாந்திர மானத்தை அனுட்டிக்கலாமா?

(1) இரவிற் செய்யப்படும் உற்சவமாதலால் சாந்திரமானம் பிரதானமென்பரேல் அது பொருந்தாது. ஏனெனில் விநாயக சதுர்த்திக்கு மத்தியான காலமும், கந்தசஷ்டிக்கு சாயுங்காலமும் வேண்டுமென்றிருப்பதால் இவை பகலில் செய்யப்படும் உற்சவங்களாகி சௌரமானமே பிரதானமாய் விடும். திதிகள் சந்திரனைப்பற்றியதால் சாந்திரமான மென்பரேல் சந்திரனுக்கு அதிகாரமற்ற பகற் காலத்தில் திதிக்கு பலமில்லையாதலால் ஸௌரமானமே பிரதானமாகும். முதநூல் சித்தாந்தத்துக்கு முரணாகும்.

இரு மாதங்களும் அனுட்டிக்கலாமென்றால் இத்தகைய ஆசங்கை சித்தாந்தம் இவைகள் பயன்படாதொழியும்.

(3) சூரியன்சிங்கராசியில்பிரவேசித்த காலமே ஸௌரமான ஆரம்ப காலம் என்றும் இச்சூரியனுடன் சேர்ந்து விலகும் சாந்திரமானம் கொள்ளத்தக்கது என்பரேல் சைவகால விவேகம் 80, 81ஆம் பக்கத்தில் சௌரமானம் மார்கழி முதல் கார்த்திகை வரையுள்ள 12-மாதங்கள் அல்லது சித்திரைமுதல் பங்குனிவரையுள்ள 12 மாதங்கள் என்று நிர்ணயித்திருக்கிறது. அமர நிகண்டிலும் அப்படியே கூறுகிறது. ஆவணியை முதலாகக் கொள்ளவில்லை. திருவிளையாடற்புராணம்தடாதகைப்பிராட்டியார்திருவவதாரப்படலத்தில் வித்தியாவதி தைமாதம்முதல் 12மாதம் விரதம் அனுட்டித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

பின்னும் மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் தைமீ தேவர்களுக்கு உதயகாலம் என்றிருப்பதால் ஆவணிமாதமாதியாய்கொள்ள ஆதாரமில்லை.

ஆராய்ச்சியாளர்கள் தக்க மூலாகமப் பிரமாணங்கொண்டு சாந்திரமானத்தை நிலைநாட்டின் எனக்கும் யாதொரு ஆக்ஷேபனையும் இல்லை.

* சூரியன் சொக்ஷேத்திரமாகிய சிங்கராசிக்குவரும்காலமே கொல்லம் ஆண்டுப்பிறப்பு. அது ஆவணி மாதம் அதிலிருந்துவிநாயக மகாசதுர்த்தி முதலானவிரதங்கள் அனுட்டிக்கப்படும் எனக்குறித்ததேயன்றி, சௌர சாந்திரமான ஆரம்பகாலங்களைப் பற்றி யாம் எதுவுமே கூறவில்லை. சௌர சாந்திரமானங்களைப்பற்றிய விவரம் யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிட பரிபாலினி ஆசிரியர் பிர்மஸ்ரீ இ. சி. இரகுநாதையரவர்களும் பிறரும் வெளியிட்டுள்ள ஆதாரங்களைக்கண்டும் மேலும் அவர்களை வினவியும் தெளியலாம். (பட்டர்)

உ

# கந்த புராணம் காப்புச் செய்யுளின் உரை விளக்கம்.

(சின்னக்காஞ்சிபுரம், திரு, சேனாபதி நடேச செட்டியாரவர்கள்.)

(9-ம் ஆண்டு 79-ம் பக்கத்தொடர்ச்சி)

திருமுருகப் பெருமான் "திகடசக்கரன்" என்று ஓர் அரிய சொற்றொடரை மொழிந்தருளக்கேட்ட திரு, கச்சியப்ப சிவாசாரியார் அவன் அருளின் வண்மையால் அதன் பொருள் உணர்ந்து தாம்பாட இருக்கும் கந்த புராணத்திற்குக் காப்புச் செய்யுளாக அமைத்தனர்.

இவ்வருள் நிறைசொற்றொடராம் "திகடசக்கரன்" என்பதை "திகழ் கரன்" "தசைக்கரன்" என அமைத்து இறைவனது மூத்தபிள்ளையாரும், முருகவேளின் மூத்த அண்ணலுமான" விகடசக்கரப் பெருமானைக் காப்புடைக் கடவுளாகப் புகழ்ந்து உரைத்த செய்யுளாகும்.

இவ்வாறு அமைந்த இச்செய்யுளின் கருத்தே நக்கீரர் தந்த புகழ்தரு வெண்பாவின் பொருளாகும். அது:—

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். என்பது,

இதில் முருகவேளை மாயோற்கு மருகனாகவும், ஈசற்கு மகனாகவும், ஈசனின் மூத்த மகனும் ஒருகை முகனுமான விநாயகருக்குத் தம்பியாகவும், அமைத்துள்ள முறையின் நுண்பொருளை ஓர்ந்து ஈசன்மக்கள் இருவரையும் புகழ்ந்ததாகும். இறைவன் திறமும், மூத்த மகனாரின் திறமும், ஒருவழியாகவும், மாயோன் திறமும், முருகவேளின் திறமும் ஒரு வழியாகவும் புகழ்ந்து அமைத்ததாகும்.

இறைவன் திறம்:— இறைவன் தனது நுதற் கண்ணைத் தப்பேரழல் எழுப்பி முப்புரம் அழிக்கப் பல்படையும் விளங்கக் கொள்ளாது ஒரு புன்னகையால் அழித்து நீறாக்கியதேபோல் அவன் தன் மூத்த மகனும் ஒருகை முகனும் (ஒருகைம்மா முகனாக, வேழமுகனாக) எத்திறத்த அடுபடையாலும் வெல்லமுடியாத கஜமுகாசுரனைத் தன் வேழ முகத்துள்ள ஒரு நீண்ட, கொழுத்த, சதை நிறைந்த, கரத்தால் பற்றி, அதில் வளர்ந்த ஒரு தந்தக்கொம்பை அழகிய ஒரு திருக்கரத்தால் ஒடித்து, அவனை விண்ணேற்றிய ஆற்றலையுடைய அவ்வேழ முகத்திருக்கரமே முருகவேள் காதலித்த வள்ளித் திருநாயகியின் மனங்கனியச் செய்தது. அத்திருக்கரத்தைப் புகழவே விநாயகப் பெருமான் தன் தேவவடிவத்துத் தன்னுலுகரமும், முன்னுலுகரமும் ஆக ஐங்கரத்துள் தனது கருருவத் திருக்கரத்தால் அடல் அவுணனை அடக்கி அருளிய ஆற்றலை விளக்கவே "திகடசக்கரச்செம்முகமைந்துளான்" என்பதில் "திகழ்கரம்" "தசைக்கரம்" "செம்முகம்" ஐந்தும் கொண்டவன் என்பது விளங்கும்.



## பெருமாள் திருமொழி.

### வித்வக் கோட்டம் மான்பதிகம்.

வெங்கட்டின் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே
எங்கும்போ யுய்கேன்உன் னிணையடியே யடையலலால்
எங்கும்போய்க் கரைகாண தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.

என்பது: வங்கம், பங்கம், சேறு, குளம், பங்கஜம்—சேற்றில் தோன்றும் மலர் தாமரை. வ—ப போலியாயிற்று. பாணம், வாணம், பண்டி, வண்டி—பாணசூரன், வாணசூரன், பங்காளம், வங்காளம், என்பன பல......மாப்பறவை: மா-கருமை, கரியவண்டினம். மா: வண்டாகிய பறவை. இரு-பெயரொட்டு.

கொற்ற வேற்றானைக் குலசேகரனர் திருமால் பாதமலாது வேறு பற்றில்லை என்று தாம்கொண்ட கொள்கையை விளக்க அமைத்த உவமையின் பொருளை என் சிற்றறிவுக்குத் தோன்றியதை ஈண்டு தருவதால் நுண்மாண் புலமை கொண்டார் ஆய்ந்து அறிவிப்பார்கள் என்று பணிந்து வேண்டுகிறேன்.

உவமை விளக்கம்:— எறிகடல் வாய் எயும் யாப்பறவை (கரிவண்டு) எங்கும்போய்க் கரைகாணது வங்கத்தின் கூம்பு ஏறும்; (அது) போன்றேனே என்பது. பங்கம்: சேறு ஆகுபெயர், கூம்பு: கூம்புதல், கூம்பல், குவிதல், சுருங்குதல். தாமரை இதழ்கள் குவிதல் இயற்கை.........

பொருள் விளக்கம்:—கருங்கடலின் நிறத்தாலும், ஒலியாலும் ஒத்த கரிய நிறம் கொண்டு இடையறாது ஒலி செய்து பறக்கும் வண்டினம் உறைதற்குஉரியதும், (பங்கம்) சேற்றில் தோன்றுவதுமான தாமரைமலரில் தன் பேடை உள்ளே உறங்கவும், ஆண் வண்டு காலத்தாழ்த்தியால் அடையாது, செங்கதிர்ச் செல்வனின் மறைவால் இதழ்கள் குவிந்து சுருங்கின உருவினதான தாமரை மலரின் குவிந்த முனையினுல் உள்ளே செல்லமுடியாது, அதை விட்டுப் பிரிந்து, பறந்தும், மீண்டும், மீண்டும் அங்குச்சென்று, பரிதியங்கதிரின் தோற்றமில்லாத காலைவேளையில் மலராத தாமரை மலரின் முனையில் தங்கி வேறு உய்யும்வகை காணது, தன் பேடையைக் கண்டு அடையாது, வருந்திய கரிய வண்டினம் அலைவது போல், யானும் ஆணவமலத்தால் பிணிப்புண்டு நின்திருவடிகளைக் காலத்தால் கண்டு, உய்யும்வகை காணது, அறியாது அலைந்தேன்.

ஆதலால் வித்துவக் கோட்டம்மானே! நின் பகைவன் ஏவிய வெய்ய, திண்ணிய, கரிய, பெரிய யானையை அழித்து, பெருமை கொண்டவனே! என்னைச் சூழ்ந்த ஆணவ மலத்தையும், அதனுல் உண்டான அறியாமையையும் அழித்து, நினது இணைபிரியாத திருவடிகளில் அடைந்து இன்புற அருள் புரிவாய் என்பது.

வண்டினம் பகற்காலத்தில் வெளியே உலாவி இரவில் தாமரை மலரில் தங்குவது.

மாப்பறவை: வண்டினம்; காகம் அல்ல; பருந்தல்ல.

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை.

திருப்பரங்குன்றம்.

திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்.

வாய் விரிந்து அவிழ்ந்த: மலர்ந்த, முள்தாள், தாமரை, துஞ்சி: உறங்கி, வைகறை: விடியல், நெய்தல்: ஆம்பல், எல்பட: சூரியன் தோன்ற. காமர்: அழகு. அரி: கடல், அரிக்கண ஒலி: கடல் ஒலி, வண்டின் கணஒலி.

எறிகடல் ஒலியைப்போல் ஒலிக்கும் அழகிய சிறையுடைய வண்டுகள் சேறு செறிந்த அகன்ற வயலிலும், சுனை முதலிய நீரிடங்களிலும் தோன்றிப் பகல்போது முழுதும் மலர்ந்திருக்கும் தாமரை முதலிய மலர்களின் தேனை நிறைய உண்டு பரிதியஞ்செல்வன் மறைய தாமரை மலர்களின் இதழ்கள் கூம்பாத வேளையில் உறங்க உள்ளே சென்றிட, கூம்பிட இராப்போது முழுதும் துஞ்சி, செங்கதிர்ச் செல்வன் தோன்றிட மக்களின் மனக் கமல மலரும் இனக்கமல மலரும் மலர, எவ்வாயும் வாய்திறப்ப உறங்கிய வண்டுகள் வெளிப்போந்து தேன் சிந்தி, மணங்கமழும், ஆம்பல் மலரில் தேன், உண்டு களித்து ஒலிக்கும் என்றதால் வண்டுகள் தாமரை மலரில் கூம்பாதகாலத்தே உள்ளே புகுந்து துஞ்சும், விடியலில் வெளிவரும் என்று நக்கீரர்கொண்ட செம்பொருளையே கொங்கர்கோமானை ஆழ்வாரும் காலத்தால் மலருள் புகாத வண்டுகள் கூம்பியதும் கூம்பியமுனையில் ஏறி ஒலித்தலைத்தான் நன்கு அறிந்து அவ்வண்டு ஒத்த தன்மனம் திருமாலின் திருவடிக்கமலமே அடைக்கலமாக, வேறு இல்லையாகத்தெளிந்து அடைந்து இன்புறக்கொண்ட கருத்தை விளக்க, "எறிகடல்வாய் ஏயும் மாப்பறவை (அஞ்சிறை வண்டின் கணம்) பங்கஜத்தின் கூம்பேறி உள்ளே புக எங்கும் போய் உள் அடையுமகரைகாணாது மீண்டும் கூம்பு ஏறுதல்போன்று ஆனேனே" என்றார். இத்திருமொழிக்கு உரை தந்த பெரியார்களின் கருத்தை உரை நூல்களில் காணலாகும். மாப்பறவை: காகம் என்றும், வங்கம்: கப்பல், கூம்பு: பாய்மரம் என்றும் கொண்டனர்.

கற்றீண்டு மெய்ப் பொருள்கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

கற்றுத் தெளிந்து மெய்ப்பொருள் கண்டு நுண்மாண் புலமை கொண்டோரே பெரியோர் ஆவர். ஏனையோர் நெறியறியாராவர் என்பது பொய்யா மொழியாரின் கருத்தாகும்.



## குறுந்தொகை 75-ம் செய்யுள் உரையின் ஐயப்பாடு.

(ஓர் ஆராய்ச்சி)

நீ கண்டனையோ கண்டார்க் கேட்டனையோ
வொன்று தெளிய நசையின் மொழிமோ
வெண் கோட்டியானை பூஞ்சுனை படியும்
பொன்மலி பாடிலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

இது படுமரத்துமோசிகீரனார் பாடியது.

இச்செய்யுளின் பாடபேதமும், விரிவுரையும், 'கலைமகள்' 9-ம் தொகுதி 49-ம் பகுதி 32-ம்பக்க முதல் "குறுந்தொகைச்செய்யுளில் ஓர் சரித்திரக் குறிப்பு" என்ற மகுடமிட்டுத் தமிழ் நூற்கலைஞர் திருவாளர், S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L., அவர்களால் ஆராய்ச்சிமிகுந்த முறையால் எழுதப்பட்டு வெளிவந்துளது. அதன் விரிவுரை ஆண்டு பாக்கக் காணலாகும்.

இச்செய்யுளின் துறைவகுத்தலில் பேராசிரியர்களான இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் மாறுபடுகின்றனர். இதன் துறைக் குறிப்பு பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது என்று இளம்பூரணரும், தலைவன் வரவு தோழி கூறிய வழிவிரும்பிக் கூறியது என்று நச்சினார்க்கினியரும் குறித்தது, தொல்-களவியல் 6-ம் சூத்திர உரையில் அறியக் கிடக்கும்.

இச்செய்யுளில் "பூஞ்சுனைபடியும்" என்பது "சோனை படியும்" என்ற பாடபேதங்கொண்ட ஒரு ஓலை ஏட்டினின்று எழுதியது என்று நண்பர் ஒருவரால் எனக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட காகித ஏட்டுப்பிரதியில் காணப்படுகிறது. மேலும் துறைக்குறிப்பு:- தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது என்பது.

இதன் உரைவிளக்கம், என் சிற்றறிவுக்குத்தெளிந்ததைகீழ்த் தருகிறேன். இச்செய்யுள் ஆசிரியர் படுமரத்துமோசிகீரனார்கருத்தும் இஃதே. கற்றோர் அறிந்து விளக்கப்பணிந்து வேண்டுகிறேன்.

இச்செய்யுளின் அன்வயம்:— பாடிலியே! (பாடு-இலியே) (என்) காதலர் வரவு யார்வாய்க் கேட்டனை? நீ கண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ? வெண்கோட்டுயானை (அன்ன)காதலர் பொன்மலி பெறீஇயர், சோனைபடியும், (நீபொன்) நசையின் தெளிய ஒன்று மொழிமோ! என்றது.

இதன் பொருள்:—பாடுஇலியே! வருத்தம் ஒன்றும் இல்லாத தோழியே! என்னை விட்டுப் பிரிந்த காதலர் வரவை யார்வாய்க் கேட்டனை? நீயே நேரில் கண்டனையோ? அல்லது அவர் வரவைக் கேட்டனை? நீயே நேரில் கண்டனையோ? அவர் வரும்வழியில் கண்டு அறிந்த தக்கார்வாய்க் கேட்டனையோ? அவர் வரும்வழியில் கண்டு அறிந்த தக்கார்வாய்க் கேட்டனையோ? அவர் வரும்வழியில்

யுடைய ஆனையானை ஒப்பவர்! அஞ்சார்! வருந்தார்! ஆனால் அவர் மிகுந்த பொன் அணிகலன்-மிகுந்த பொன்கலன்கள் பெற்றவர். அவர் வந்தால் பொன்மிகத்தருவர். ஆதலால் நீ பொன்பெற விரும்பினால், என்காதலர் வரவு ஒன்றனையே தெளிய அறிந்து சொல்வாயாக நீ விரும்பிய பொன்னும் பெறுவாயாக.........என்பது.

இதனால் விடாமழைக்காலமாதலால் வழியில் மழையால்வாட்டமுறாது, அவர் விரைவாக நம்பால்வரும் வழியைநோக்கி அறிவிப்பாய் பொன்தருவார் என்று தன் காதலரைப் பிரிந்த தலைவி தன் தோழிக்குக் காதலர் வரும்வரவு அறிந்து கூறக்கேட்டது. சோனைபடியும்: பெருமழையில் படுவர் என்பதை அடுத்த 76ம் செய்யுளில்,

பெருங் களிற்றுச் செவியின்
மானத்தை இயத் தண்வரல் வாடை
தாங்குங் கடும்பனி யுகிர்நடுங்கர் உறவே......

யானை தன் காதுகளை அசைத்தலேபோல் இடையறாது வீசும்குளிர் மிகுந்தவாடைக்காற்றினால்,பனிப்புற்று, நடுக்கம்உறவே என்றதால் சோனைபடியும் காதலர்என்று பொருள்கோடல்சிறப்புடைத்தாகும்.

பாடிலி: பாடு-இலி, பாடு-வருத்தம், அனுபவிக்கை-தன்தலைவன் பிரிவாலும், மழையாலும், வருத்தமுற்று அவர் வரவை எதிர்நோக்கி நிற்றலால் தோழியே தன்னை ஒப்ப வருத்த மிலளாக இருத்தலைக்கண்ட தலைவிதன் வருத்தம் தோன்றக் கூறியதாகும். "பூஞ்சுனைபடியும்" எனக் கொண்டால் காதலர் வரவு தெளியத் தெரிந்தால்பூக்கள்நிறைந்த ஊற்றுநீரில்படிந்த, நீராடிப்பூக்கொய்து, அவர் வரவை எதிர்நோக்கி இருக்கலாம். எனக் கொள்ளக்கூடும்.

யசோதர காவியம் 2-வது சருக்கம் 27-வது செய்யுள் தலைவிதன் வருத்தத்தைத் தன் தோழிக்குக் கூறியதாக:—

என்மனத்திவரு மென்னோயிவள் அறிந்திலை கொல்என்றே
தன்மனத்தினை யவட்குத் தான்உரைத் திடுதலோடு
நின்மனத்திலாத சொல்லைநீபுனைந்து அருளிற்று என்கொல்
சின்மலர்க் குழலிஎன்றே செவிபுதைத்தினிது சென்றாள்

என்றதால் தலைவி தன்மனத்துள்ள ஒன்று அரிதெனினும் தோழிக்குச் சொல்வது மரபு என்பது அறியத்தகும்.

இதன்பொருளையும் பாடபேதத்தையும் வேறு பாடபேதமும் பொருளுங் கொண்டு அறிஞர் அவர்கள் விளக்கியுள்ளார்கள். "சோனை படியும் வெண்கோட்டு யானை பாடலி" வெண்கோட்டு யானை படிந்தாடும் சோனை நதிசூழ்ந்த பாடலிபுரம் என்று விளக்கியிருக்கக் காணலாம்.



கேட்டு......தக்ஷன் பரமேச்வரைப் பணிந்து ஸ்தோத்திரத்தினால் ஸந்தோஷிக்கச் செய்யலானான். 'தேவரும் சிக்ஷகரும் சாச்வதரும் நிலையுள்ளவரும் அழிவில்லாதவரும் மஹாத்மாவும் எல்லா வுலகத்திற்கும் பதியுமான மஹாதேவரை நான் சரணமடைகிறேன்' என்றான்", 'தக்ஷனவன் முழங்கால்கள் பூமியிற் படிய நமஸ்கரித்து ஈச்வரரிடமிருந்து வரத்தை யடைந்து விருஷபத்வஜரான அவரை ஆயிரத்தெட்டு நாமங்களினால் துதித்தான்' என்ற சாந்தி 290-வது அத்தியாயத்தால் சிவஸந்நிதியில் தக்ஷன் ஸ்துதி இவ்விதமிருந்ததென்பது தெரிகிறது. அந்நாமங்களனைத்தையும் அவ்வத்தியாயத்திற்காணலாம். அப்பால் அந்த அத்தியாயத்தானே "தக்ஷன் மஹாதேவரைத் துதித்து விட்டு நின்றான். பகவானும் மிகவும் பிரீதியடைந்து......தக்ஷனை நோக்கிச் சொல்லலானார். '...தக்ஷ! உன்னுடைய இந்த ஸ்தோத்திரத்தினால் மிகவும் சந்தோஷமடைந்தேன்......என்னுடைய பக்கத்திலிருக்கப்போகிறாய்......எனதருளால் ஆயிரம் அச்வமேதங்கள் நூறு வாஜபேயங்கள் ஆகிய இவற்றின் பயன் அடைவாய்' என்றார்" என்றுஞ்சொல்லிற்று. இப்படிச் சிவபிரானிடம் சரணமடைந்தவனும் வரம்பெற்றவனுமாகிய தக்ஷன் அப்பிரானைச் சபிப்பான்?

3. ஆ:— சிவனுக்கு மயானவாஸம் தக்ஷன் கொடுத்த சாபத்தால் வந்தது.

ச:—சர்வசம்மார காலத்தில் அரிபிரமாதியனைத்துயிர்களும் வடவைத் தீயாற்கடல் நாசமடைதல்போல நாசமடைய, அவ்விடந்தான் சுடுகாடு. அப்போது அங்கு மிச்சமிருக்கக் கூடியவர் அவ்வுயிர்களை நாசம் பண்ணிய கர்த்தாவே. அவர் சங்கார கர்த்தராகிய சிவபிரான். அச்சம்மாரானந்தரம் அவர் உறையுமிடம் அச்சுடுகாட்டைத் தவிர வேறும் இருக்குமோ? ஆகையால் அம்மயானவாஸம் அவரது ஏகத்துவத்தை விளக்குஞ் சாட்சியாதல் காண்க. அது சாபத்தால் நேரக்கூடியதா? அற்றன்று, உலகிடைக் காணப்படும் ஸாமானிய மயானங்களில் வசிப்பதையே அச்சாபம் சுட்டுமெனின், அநுசாஸனம் 207-வது அத்தியாயம் "மகாதேவர், ......தேவியே!......பூதங்களை நான் மயானத்தில் நிறுத்தினேன். ......அங்கிருந்துகொண்டு எல்லாப் பிராணிகளின் பயத்தையும் போக்குகிறேன்......பரிசுத்தத்தை விரும்பும் பிராமணர்கள் மயானத்தை எப்போதும் பரிசுத்த மென்று சொல்லுகின்றனர். தவம் செய்கிறவர்களாலும் மோக்ஷத்தைக் கருதுகிறவர்களாலும் மயானம் எப்போதும் அடையப்படுகிறது........அது வீரர்களுடைய ஸ்தானமாயிருப்பதாலும் அதனை எனக்கு இடமாகச் செய்து கொண்டேன்......உச்சிப்போதிலும் காலை மாலைகளிலும் ருத்திர

ரைத் தேவதையாகவுடைய (திருவாதிரை) நக்ஷத்திரத்திலும் தீர்க்காயுளை விரும்புகிறவர் அசுத்தத்துடன் அங்கே போகக்கூடாதென்பது நிச்சயம். பூதங்களினாலுண்டான பயத்தைப் போக்குவதற்கு என்னைத் தவிர மற்றொருவனால் முடியாது. நான் அங்கிருந்துகொண்டு ஒவ்வொருநாளும் ஜனங்களையெல்லாம் காப்பாற்றுகிறேன். என் கட்டளையினால் இங்குள்ள பூதங்களின் கூட்டங்கள் யாரையுங் கொல்லுவதில்லை. உலகங்களின் நன்மைக்காக அந்தப் பூதங்களை நான் மயானத்தில் ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருக்கிறேன்.......' என்று சொன்னார்" என்று புகழ்ந்து அம்மயானம் சுத்தமென்பதையும் சிவபிரான் அதில் வசிப்பது லோகோபகாரமென்பதையுங் காட்டுகிறது. இங்குஞ் சாபத்துக்கிடமேது? 'மாயா மமதாஹங்கார தஹநம் ச்மசாநே' (மாயை மமதை யகங்காரங்களைத் தகித்தவிடம் மயானம்) என்ற நிர்வாணத்தாற் சிவபிரானிருந்தருளும் மயானம் ஞானிகளினுள்ளமுமேயாமென்க. மகா மயானத்தை ஆனந்தவனமென்று அவ்வுபநிஷத்தே 'மஹாச்மசாநேப்யாநந்தவநேவாஸ' என்ற வாக்கியத்தாற் கூறியுமிருக்கிறது.

4. ஆ:— தக்ஷன் வீரபத்திரனையும் பூதப்பிரேத பசாசங்களுக்குத் தலைவனுமாறு சபித்தான்.

ச:—அஃதுண்மையாயின் அடிபட்ட நாய் குரைப்பதுபோன்றதாகும் அடிபட்ட தக்ஷன் அவ்வீரரைச்சபித்தது. சாந்தி 211வது அத்தியாயத்திற் கருடன் 'அந்த ஸ்ரீஜநார்த்தனரையும் நான் ஆகாயத்தில் ஸந்தோஷத்துடன் கண்டேன். அவர் பாற் கடலின் மேற்பாகத்திலுள்ள சிறந்த கறுத்த மேகம் போலத் தோன்றினார்....... ப்ரம்மா முதல் ஸ்தம்பமென்னும் ஜந்துவரையில் சப்திக்கக்கூடாதென்று கோபத்துடன் புருவங்களை நெரித்துக்கொண்டு, கோணலான கண்ணுள்ள பலவிதப் பூதக் கூட்டங்கள் அங்கு இருந்தன' என்று தான் 'பாற் கடலின் வடகரையில்......ஸ்ரீ ஹரியினுடைய வைகர்ணமென்னும் ஆலயத்திற்' பூதங்களைக்கண்டதாகச் சொல்லுகிறான். அவைகளின் மகிமாவர்ணனங்களும் அவ்வத்தியாயத்திற் பிரசித்தம். அங்ஙனம் பூதகணங்களுக்கு அவ்விஷ்ணுவாலயமும் உறைவிடமானாற் பூர்வபக்ஷம் அவைகளைமதிக்கத்தானேவேண்டும்? அங்ஙனமின்றி அவைகளையும் அவைகளுக்குத் தலைவராயிருப்பவரையும் சாபவசத்தினரென அவமதித்தல் அதற்குப் பெரியதோர் பாகவதாபசாரமாகும். பூர்வபட்சம் பூதப் பிரேத பசாசங்களை நிந்தித்த பாவத்தாலேயே அது மதிக்கும் ஆழ்வார்களுள் ஒருவர் பூதமும் மற்றொருவர் பேயுமானாரென்க. நம்மாழ்வார் சிறிது காலமாயினும் பிரேதசுபாவத்தோடிருந்தார். நிற்க, அந்த யாகத்தில் 'நந்தியானவன் ப்ராஹ்மணர்கள் அர்த்தகாமபராளாய்ப் போகக்கடவர்களென்றும், பின்னும் அநேக விதங்களாகச் சபித்தான்'



என்றது பூர்வபட்சம். ஆனால் அந்தச் சாபம் பலித்ததா? இல்லையா? என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டது. தர்மத்துக்கும் மோக்ஷத்துக்கும் சாதனமான வைதிக சைவாசாரம் பிராமணர்களாற் கைவிடப்பட்டது. அவர்கள் ஆசரிப்பன பாஞ்சராத்திர மாயாவாதாதி அவைதிகமதங்களே. ஆகலின் அச்சாபம் அவர்களுக்குப்பலித்ததென்பது வாஸ்தவமாயிற்று. "அந்த யாகத்தை.......வீரபத்ரர்.........எரித்தனர்.........பிறகு, நான் முகன் முதலான எல்லாத் தேவர்களும் ஸ்ருஷ்டி கர்த்தனை தக்ஷனும் அஞ்சலி செய்துகொண்டு, 'நீர் யார்? சொல்லும்' என்று கேட்க, 'வீரபத்ரர், '......நான் வீரபத்திரரென்று பெயர் பெற்றவன்.........உமாபதியான தேவதேவரைச் சரணமடை.......' என்றசொன்னார்" என்ற சாந்தி 290வது அத்தியாயத்தால் பிரமனாகிய அப்பனும் தக்கனாகிய பிள்ளையும் வீரபத்திரர் முன் நின்ற நிலையைக் கண்டவர் தக்ஷனுக்கு வீரபத்திரரைச் சபிக்க வலியுண்டென்று மறந்துஞ் சொல்வரா?

5. ஆ:— தக்ஷன் விரும்பின யாகபலனை விஷ்ணுவே அவனுக்குக் கொடுத்தார்.

ச:— அவன் விரும்பின பலன் இன்னதென்று சொல்லாமல் அவனுக்கு அதைக் கொடுத்தார் விஷ்ணு வென்பது வஞ்சப் பிரசங்கம். பிரத்தியக்ஷ பலன் அந்தப் பெரியவனுக்குத் தலை போனதும் ஆட்டின் தலை வந்ததுமேயாம். அப்பலனை வீரபத்திரமூர்த்தியே அவனுக்குக் கொடுத்துவிட்டார். அவன் சிவபிரானைப் பணிந்த பிறகு அப்பிரானே அவனுக்கு வரங்கள் கொடுத்த செய்தி மேற்கூறப்பட்டது.

6. ஆ:— ஹவிர்ப்பாகத்தை முதலில் உருத்திரனுக்குக் கொடுத்து அப்பால் புனர்ஸ்நாநமும் ஆசமனமுஞ்செய்து மற்றைத் தேவர்களுக்குங் கொடுக்கவேண்டு மென்று விஷ்ணு நியமித்து அவனுக்கேற்பட்ட சாபதோஷத்தை மாற்றினார்.

ச:— இந்த நியமத்தை 'ப்ரஹ்மா இந்த்ராதி தேவர்கள்' செய்ததாக அக்கட்சிக் குறிப்புச் சொல்லுகிறது. இஃதொரு முரண். "ஆயின், 'அப உபஸ்ப்ருச்ய' என்கிற வாக்கியத்தால் உதக பரிசேஷனம், ருத்ராஹூத்யனந்தரத்தில் ஆசாரமாவதென்னையெனின் யாகங்களில் ருத்ராவிர்பாகம் முதலில் கொடுக்கவேண்டியதாகலின் அங்ஙனங் கொடுத்தபிறகு விஷ்ணுவாதிதேவர்களுக்கு அவரோடு சமானமாக உடனே கொடுக்கப்படாதாகையால் ருத்ராஹூத்யனந்தரமாகிய ஜலபரிஷேசனம் உருத்திரமூர்த்தி அந்தர்த்தானமாதற் பொருட்டென்று முதனூலுணர்த்துமென்க. 'அப: பரிச்ஷிஞ்சதி ருத்ரஸ்யாந்தர்ஹித்யை:' என்கிறசுருதியால் உருத்திரமூர்த்தியினுடைய அந்தர்த்தானத்திற்காகச் சலபரிஷேசனம்

செய்கின்றார்களென்று பெறப்பட்டது. 'யோமஹாதேவ மந்யே ந்ஹீந தைவேந தூர்மதி: ஸக்ருத் ஸாதாரணம் ப்ரூயாத் ஸோந்த்ய ஜோநாந்த்யஜோந்த்யஜ:' என்கிற புராணவசனத்தால் எவன் அன்னியமான ஹீனதெய்வங்களோடு சமானமாக ஒரு வார்த்தையாவது மஹாதேவரைப் பேசுவானோ அந்தத்தூர்மதியே சண்டாளனாவானன்றி லோகப் பிரதீதியால் சண்டாளனென்றழைக்கப்படுமவன் சண்டாளனாகான் என்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. மேல்வாக்கியங்களால் ருத்ராஹுத்யனந்தரம் ஜலபரிஷேசனப் பிரசங்கம் நிர்ப்பாதிதமாய் விட்டதென்க. இன்னுஞ் சிவபெருமானைச் சாமானியமாகிய இதரதெய்வங்களோடு சமானமாகக்கொண்டு நமஸ்காரஸ்தோத்திராதிகள் செய்யப்படாதென்று விதிக்கும் ருக்வேத வாக்கியத்தை யிங்கே யுதகரிக்கின்றோம். 'மாத்வாருத்ர பிக்ருதாமா நமோ நமோபிர்மாதுஷ்டு தீவ் ருஷபமாஸஹுதி:' இந்தச் சுருதியில், சுரச்சிரேஷ்டப் பிரபுவாகிய ஹே ருத்ரமூர்த்தி! உன்னை இதர தெய்வங்களோடு நமஸ்காரங்களாலும், துஷ்ட ஸ்தோத்திரங்களாலும், ஆஹ்வானங்களாலும் கோபிக்கச் செய்யோமாக என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் சிவபெருமானோடு சமானமாக இதரதெய்வங்கட் கவிர்ப்பாகங் கொடுப்பாரைப் பரமேசுவரர் கோபிப்பா ரென்பது பெறப்படுதலால் சகலதேவதாஸ்வாமியாகிய ஸ்ரீ ருத்ரமூர்த்திக்கு அன்னிய தெய்வங்களோடு ஸமானமாய் ஸ்மார்த்த சுரௌத கர்மங்களில் ஆஹுதி செய்தல் கூடாதென்றும், ருத்ராஹுதி கொடுத்த பிறகு அவர் அந்தர்த்தானஞ் செய்தற்காகவே ஜலபரிஷேசனம் ஆசாரமாயிற்றென்றும், உருத்திர மூர்த்தி அந்தர்த்தானஞ் செய்த பிறகே மற்றைத் தேவர்களுக்கு ஆஹுதி கொடுத்தல் வேண்டுமென்றும் நிச்சயித்து மேலோரநுஷ்டித்து வருகின்றனர். சிவபெருமான் அந்தர்த்தானஞ் செய்யாத பட்சத்தில் அவரோடு சமானமாய் அன்னிய தெய்வங்கட் காஹுதி செய்யக்கூடாதாகையால் ருத்ராஹுத்யனந்தரமான ஜலபரிஷேசனம் அத்தியாவசியகரமாயிற்றென்க. இப்படி விசாரித்தறியாத மூடஜனங்கள் உருத்திர மூர்த்தி நீச்சதெய்வமாகையால் ஜலபரிஷேசனம் அவர்க்காசாரமாயிற்றென்று தங்கள் சுவடிகளில் எழுதியிருக்கின்றனர். அவர்களறியாமையை யெடுத்துரைக்க எமக்கு நாணமாயிருக்கின்றது. அவர்ப்படியே நீச்சதெய்வமாகிற பட்சத்தில் சமஸ்த தேவர்களுக்குங் கொடுத்துத்தீர்ந்த பிறகு அவர் பெறுதற்குரியாரே யன்றி முதலில் அல்லது இடையிற் பெறுதற்குரியாரென்பது எவ்வளவும் பொருந்தாது. இங்ஙனமாகவும், ஜலபரிஷேசனம் விதித்தமையால் அவர்க்குப்பின்னர் ஆஹுதி பெறுதற்கான தேவர்களின்னுமிருப்பதாகப் புலப்படுகின்றது. ஆகவே, அவர்க்குப் பிற்பட்டவர்கள் அதிக நீச்சமுடையாரென்பது பெறப்பட்டது. அதிக



நீச்சமுடையாரைவிட்டு அற்ப நீச்சமுடையார்க்குச் சலபரிஷேசனம் விதித்தது யாது காரணம்? அன்றியும், உருத்திரமூர்த்தி நீச்ச தெய்வமானபோது முறையே அவர்க்குப் பின்னவர்கள் அதிகநீச்சமுடையாரென்பதபெறப்பட்டநியாயத்தால் ஜலபரிஷேசனம் அநாவசிய மென்றே நிச்சயிக்கப்படுகிறது. உருத்திர மூர்த்தியொருவர் தவிர மற்றவர்கள் நீச்சமுடையாரல்லவெனின், அல்லாதவர்களைப் பின்னிருத்தி உருத்திர மூர்த்தியை முன்னிருத்தியதற்குக் காரணம்வேண்டும். இது எங்குள்ள சாம்பிரதாயம்? இனி இந்த விதிமுறையால் பஞ்சமனுக்கு முன்மரியாதையும், பிராமணனுக்குப் பின் மரியாதையும் செய்யவேண்டிவரும். இப்படிப் பூர்வோத்தர விரோதங்கள் வெகுவாய்க் காணப்படுதலால் உருத்திர மூர்த்தியை நீச்சதெய்வமென்று பிதற்றியது பேதமையாய் விட்டது. ஆகவே, அதிபரமாப்தராகிய உருத்திரமூர்த்திக்குக் கொடுத்த கரங்கொண்டே நீச்ச தெய்வங்களாகிய விஷ்ணுவாதி தேவர்களுக்குச் சமானமாய் ஆஹுதி கொடுக்கப்படாதென்றே ருத்ராஹுத்யனந்தரமான ஜலபரிஷேசனம் ஆசாரமாயிற்றென்க. மேலிரண்டு நியாயங்களாலும் ஜலபரிஷேசனப்பிரசங்கம் நிர்ப்பாதிதமாய் விட்டதாகையால் எக்ஞபதித்துவம் சிவபெருமானுக்கேயென்பது எல்லா விதத்தானுஞ் சாதிக்கப்பட்டது'' என்ற 'சிவாதிக்ய ரத்நாவளி' முதற் பாகத்தால் அவ்வாக்ஷேப விருள் ஓடியதறிக.

---

## 11. பார்த்தஸ்ய ஸ்வாஸ்த்ர தாநாத்.

### தனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்.

பொருள்:— அர்ச்சுனனுக்குத் தனது பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தலானும் என்பது.

அர்ச்சுனன் இரண்டுமுறை சிவபிரானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றான். அவற்றின் மூலவசனங்கள் வருமாறு:— (கதை அவைகளால் விளங்குமாகலின் தனித்தெழுதப்படவில்லை).

பாரதம் வனம் 38, 39, 40-வது அத்தியாயங்களிற் கண்டது இது. "எல்லா மஹரிஷிகளும் அர்ஜுனன் உக்கிரமான தவத்திலிருப்பதைத் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களாகி... பரமசிவனை நோக்கிச் சென்றார்கள். யாவரும்......மஹாதேவரை வணங்கி......அந்தச் செய்கையைத் தெரிவித்தார்கள்........பரமசிவனார்......வேடன் வேஷத்தைத் தரித்துக்கொண்டு.........புறப்பட்டார்......அவர்......மூகனென்பவனைப் பார்த்தார்......அர்ஜுனன்......அடிக்கவே......வேடனும்........பாணத்தை ஒரே குறியான அந்தப் பன்றியில் ஒரே காலத்தில் விட்டான்............அந்த

இரண்டு பாணங்களும்......அந்த மூகனுடைய சரீரத்தில் ஒரே காலத்தில் விழுந்தன......அந்த ராக்ஷஸன்......இறந்தான்......... அர்ஜுனன்......ஒரு மனிதரைக் கண்டான். அர்ஜுனன்......... அவரை நோக்கி......'நீ யார்?.........என்னால் குறிவைக்கப்பட்ட இந்தப் பன்றியை நீ எதற்காக அடித்தாய்?......இது வேட்டைக்குரிய முறையன்று......உன்னை உயிரிலிருந்து நழுவச் செய்வேன்' என்றான்......வேடன்......'....இது முந்தி எனக்கே குறியாயிற்று. (ஆதலால்) என்னுடையதே......ஓ! மந்தபுத்தியுள்ளவனே!...... என்னால் உயிருடன் விடப்படமாட்டாய்......' என்றான். அர்ஜுனன்.......பாணங்களாலும் அடித்தான்...பரமசிவன்....பாணங்களை ஏற்றுக்கொண்டார்..... அர்ஜுனன் வேடனிடத்தில் சரமாரியை நன்கு பெய்தான். அதனைச் சிவன் சந்தோஷமுள்ள மனத்துடன் ஏற்றுக்கொண்டார். பினாகியானவர் ஒரு முகூர்த்த காலம் அம்பு மழையைத் தாங்கிக்கொண்டு மலைபோல அசைவற்றவராகிக் காயப்படுத்தப்படாத சரீரத்துடன் நின்றார்..... அர்ஜுனன்......நாராசங்களை......விட்டான்......சூலபாணியான பகவான்.........கல்மழையை மலையானது ஏற்றுக்கொள்வதுபோல அவைகளை ஏற்றுக்கொண்டார்..... அர்ஜுனன் வில் நுனியால் சண்டை செய்தான். மலையில் வஸிப்பவர்......வில்லையும் பறித்துக்கொண்டார்....அர்ஜுனன்......கத்தியை......அவருடைய தலையில் எறிந்தான். அந்த... கத்தியும் அவருடைய தலையை யடைந்து சிதறிற்று...பகவான்... கைக் குத்துக்களால் அர்ஜுனனைத் துன்புறுத்தினார்......மஹாதேவர்......அவனை....பலத்தால் பிழிந்தினார்......தேவதேவரால்... அர்ஜுனன் இறுகக்கட்டப்பட்ட அவயவங்களால் உருண்டையாகச் செய்யப்பட்டவன் போல விளங்கினான். அர்ஜுனன் மூச்சற்றவனும் அசைவற்றவனும் ஆனான்; பிறகு, ஒன்றுந் தெரியாமல் (மயங்கி) விழுந்தான். அதனால், சங்கரர் சந்தோஷமுள்ளவராயினார். அந்தப் பாண்டவன்......திரும்பவும் அறிவு வந்தவனாகி எழுந்து... பினாகியைச் சரணமடைந்து மண்ணாலான மேடையைச் செய்து கொண்டு அந்தச்சிவபிரானைமலர்மாலையால் பூஜித்தான். அப்பொழுது ......அர்ஜுனன், அந்த மாலையை வேடனுடைய தலையில் இருக்கக் கண்டான். ஸந்தோஷத்தால் மனத்தெளிவை அடைந்து அவருடைய கால்களில் விழுந்தான். பிறகு, சங்கரர், அவன் விஷயத்தில் ப்ரீதியுள்ளவராயினர். பிறகு, அவர்......இவனை நோக்கி... 'ஓ! ஓ! அர்ஜுனா!.........உன் விஷயத்தில் பிரீதி அடைந்தேன். என்னைப்பார்......உனக்கு ஞானக் கண்ணைக் கொடுக்கிறேன்...... அஸ்திரத்தை...உனக்குக் கொடுப்பேன். நீயன்றோ......என்னுடைய......அஸ்திரத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சக்தியுள்ளவன்!' என்றார். பிறகு அவ்விடத்தில் அர்ஜுனன்...... மஹாதேவரைப் பார்வதியுடன் பார்த்தான்...அந்த அர்ஜுனன் முழங்கால்களால்



பூமியை அடைந்தும் தலையினால் வணங்கியும் சிவபெருமானை அருள் வருர்படி செய்தான்...ஹரர்....'ஓ! மனிதருட் சிறந்தவனே!...... வரனை....பெற்றுக்கொள்ளு...' என்றார். அர்ஜுனன்...'ஓ! வ்ருஷபத்வஜரே! ப்ரபுவே! மஹாதேவரே!...பாசுபதாஸ்திரத்தை விரும்புகிறேன்...' என்றான். சங்கரர்...'.. பாண்டவ! நான்...பாசுபதமென்கிற அஸ்திரத்தை உனக்குக் கொடுக்கிறேன்...' என்றார்... அர்ஜுனன்....பரமசிவனைப் பாதங்களைப் பிடித்து வணங்கி, 'உபதேசம் செய்வீராக' என்று வேண்டினான்...பரமர்....அந்த அஸ்திரத்தை அர்ஜுனனைக் கற்கச் செய்தார். (அந்த அஸ்திரமானது).... அர்ஜுனனை வந்தடைந்தது. அப்பொழுது அர்ஜுனனும்...... அதனைப் பெற்றுக்கொண்டான்....சிவபிரான்...காண்டீவ மென்ற வில்லை...அவனுக்குக் கொடுத்தார். பிறகு....ஈச்வரர் பார்வதியுடன் ...அர்ஜுனன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆகாசத்தை அடைந்தார்". சிவபிரான் தம்மோடு அர்ஜுனன் சண்டைசெய்த போது அவனிடமிருந்து பறித்துக்கொண்ட காண்டீவத்தைத் திருப்பிக் கொடுத்தா ரென்பதையே 'காண்டீவ மென்றவில்லை... கொடுத்தார் என்பது காட்டுகின்றது.

துரோணம் 79, 80, 81-வது அத்தியாயங்களிற் கண்டது இது. "வாஸுதேவர்...அர்ஜுனனுடைய அரண்மனை சென்று தீர்த்தத்தை ஆசமனம் செய்து மங்களகரமான லக்ஷணங்களுள்ள தரையில் வைடூர்யத்திற் கொப்பான தர்ப்பங்களை நல்ல படுக்கையாகப் பரப்பினார். பிறகு, அந்தப் படுக்கையை உத்தமமான ஆயுதங்களால் சூழப்பட்டதாகச் செய்து, மாலையினாலும் அக்ஷதங்களாலும் மிக்க மங்களகரமான கந்தங்களாலும் சாஸ்திர முறைப்படி அலங்கரித்தார். பிறகு தீர்த்தத்தை ஆசமனம் செய்தவனும்... பரிசாரகர்களை யுடையவனுமான பார்த்தனுக்கு, திரியம்பகரின் பொருட்டுத் தினந்தோறும் இரவில் செய்வதான பலியைக் காண்பித்தார். பிறகு, பார்த்தன் ஸந்தோஷமடைந்து மாதவரைக் கந்தங்களாலும் பூமாலைகளாலும் அலங்காரஞ் செய்து, இராத்திரியில் செய்வதான அந்தப் பலியை அந்தத்திரியம்பகருக்காக நிவேதனஞ் செய்தான். கோவிந்தர் பல்குனனைப் பார்த்து, 'நல்லது, நல்லது' என்று....சொன்னார். பிறகு...கிருஷ்ணர்...தம்...இடம் சென்றார். ...அந்த அர்ஜுனனிடம்....கருடத்வஜர் ஸ்வப்னத்தில் வந்தார்.... பீபத்ஸு....அப்பொழுது, 'கேசவரே!....பெரிய ப்ரதிஜ்ஞை ஜயத்ரதனைக் கொல்லும் விஷயத்தில் என்னால் செய்யப்பட்டது...ப்ரதிஜ்ஞை....தவறுமேயானால் என்னைப்போன்றவன் எவ்வாறு ஜீவிப்பான்?....' என்று...சொல்லினன்....கண்ணபிரான் கிழக்கு முகமாக ...இருந்து ஜலத்தைத் தொட்டு...அர்ஜுனனுடைய ஹிதத்தின் பொருட்டு, 'பார்த்த!.. பாசுபத மென்கிற உத்தமமான அஸ்திர

மானது சாச்வதமானது. அந்த அஸ்திரத்தைஇப்பொழுது நீ அறிந்தால் நாளைத்தினம் ஜயத்ரதனைக் கொல்வாய். ஆதலால், அதனை அறிவதற்காக விருஷபத்வஜரை...சரணமடை...அந்தத் தேவரை.... தியானம் செய்து மௌனத்துடனிரு பிறகு, அவருடைய அனுக்ரஹத்தினலே...அந்த அஸ்திரத்தை....நீ அடைவாய்' என்று...சொன்னர்...தனஞ்சயன்...ஆசமனம் செய்து...ருத்திரரைத் தியானித்தான். பிறகு, அர்ஜுனன்...தன்னைக் கேசவருடன் ஆகாயத்தில் கண்டான்...கிருஷ்ணனேடு கூடின அர்ஜுனன் ஆகாசத்தையும்...விஷ்ணுபதமென்னுமிடத்தையும் அடைந்து..........சென்றான். அப்பொழுது அவன்...ஒளியுள்ள ஒரு மலையையும் கண்டான்... அதன் உச்சியில்......விருஷபத்வஜரைக் கண்டான்........வாஸுதேவரோ பார்த்தனேடுகூட அவரைப் பார்த்து, சாச்வதமான வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு சிரஸினல் வணங்கினர்...அந்த ஈச்வரரை அப்பொழுது கிருஷ்ணர்ஜுனர் இருவரும் வாக்கினலும் மனத்தினலும் புத்தியினலும் செய்கையினலும் நமஸ்காரஞ் செய்தார்கள்...அந்தச் சங்கரரை அவ்விருவர்களும், சரணமடைந்தார்கள்...பிறகு ஈச்வரர்...அவ்விருவர்களையும் பார்த்து ...'புருஷ சிரேஷ்டர்களே! ..நீங்கள் வந்த காரியம் என்ன? அதனை நிறைவேற்றுகிறேன்'...என்று கூறினர். பிறகு...வாஸுதேவர் அர்ஜுனனிருவரும் அபிமுகமாக எழுந்திருந்து கைகளைக் குவித்துக் கொண்டு பக்தியோடு திவ்யமான ஸ்தோத்திரத்தினல்...துதித்தார்கள். '...எங்களுடைய அபீஷ்டமானது ஸித்திக்கவேண்டும்' என்று கூறினர்கள்....அர்ஜுனனேடு சேர்ந்து வாஸுதேவர் மஹாதேவரை ஸ்தோத்திரம் செய்துவிட்டு அப்பொழுது பாசுபதாஸ்திரத்தை அடைவதற்காக அவரை ப்ரஸன்னமாகும்படி செய்தார். பிறகு...பார்த்தன்...விருஷபத்வஜரைமலர்ந்தகண்களால் கண்டான். தன்னல் நன்ருக இரவில் ஏற்படுத்தப்பட்டதும் வாஸுதேவருக்கு நிவேதனம் செய்யப்பட்டதும் சாஸ்திரத்தில் சொல்லியமுறைப்படி அனுஷ்டிக்கப்பட்டதுமான அந்தப் பலியையும் முக்கண்ண ரருகில் கண்டான். பிறகு, பாண்டவன்...சங்கரரை நோக்கி, 'நான் திவ்யமான அஸ்திரத்தை விரும்புகிறேன்' என்று கூறினன். பிறகு சங்கரர்...வாஸுதேவரையும் அர்ஜுனனையும் பார்த்து '...அந்தத் தடாகத்தில்...என்னல்...வில்லும் அம்பும் வைக்கப்பட்டிருக்கின்றன...அம்புடன் கூடின...அந்தவில்லை...கொண்டு வாருங்கள்' என்று கூறினர்...அந்த அர்ஜுனனும் அச்சுதரும்...அந்தத் தடாகத்தை யடைந்து ஜலத்தினுள் பயங்கரமான ஒரு ஸர்ப்பத்தைக் கண்டார்கள்...வேறு ஒரு சிறந்த ஸர்ப்பத்தையுங் கண்டார்கள். கிருஷ்ணரும் பார்த்தனும்...ஆசமனஞ் செய்து கைகளைக் குவித்துக்கொண்டு...ருத்திரரை நமஸ்கரித்து...சதருத்ரியமென்கிற...மந்திரத்தைஉச்சரித்துக்கொண்டு...அந்தஸர்ப்பங்களையும் ஸ்தோத்திரம்

# செய்தித்திரட்டு.

அவிநாசி:—ஆதிசைவ பிராமண மகாஜன சபை ஆரம்பவிழா கார்த்திகை கடு, க்கூடைகளில் அகரம் சிவஸ்ரீ அமிர்தேஸ்வர சிவாசாரியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. இருநூறு பேர்வரை ஆதிசைவ அந்தணர்கள் கொங்குமண்டலத்திலிருந்து வந்து கூடினர். ஆதிசைவரனைவரும் வேதாகம விற்பன்னர்களாய் கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் சைவ சமயாசார அநுஷ்டான முறைகளிலும் மேம்பட்டு விளங்க மகாஜன சபைகூடவும், ஆதிசைவ மரபினர் யாவரும் வந்து கலந்து கொள்ளவும், அனைவரும் சமய விசேஷ நிர்வாண ஆசாரியாபிஷேகம் செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பெற்றன. ஆதிசைவர்களே ஐந்து இடங்களில் ஆகமபாடசாலை நேமித்துப் போதாயனக்கிரியை பூர்வ அபரம் ஆகிய செய்து கொள்ள வசதிகள் புரிந்துள்ளார்கள். என பண்டித சிவஸ்ரீ அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் அறிவிக்கிறார்.

திருச்செங்கோடு:— ஆதிசைவ மகாசபையின் சார்பில் அர்த்தநாரீஸ்வரர் சாஸ்திரபாடசாலைக் கட்டிடமாகிய சிவஸ்ரீ சேனுபதிக்குருக்கள் இல்லத்தில் கார்த்திகை உஎஉ அகரம் சிவஸ்ரீ அமிர்தேஸ்வரசிவாசாரியார் அவர்கள் தீக்ஷை என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினர். சமயம் விசேஷசம் நிர்வாணம் என்னும் நயனதீக்ஷைமுதல் ஔத்திரி வரை எழுவகையான தீக்ஷையின் முறைகளை அநேக ஆகம இதிகாச புராண உபநிடத திராவிட வேத ஆதாரங்களுடன் விளக்கி உமாபதி சிவத்தின் மகிமைகளையும் சிறப்பித்துக்கூறினர். இவ்வூர்சிவஸ்ரீ அர்த்தனரிசுவரக் குருக்கள் தமிழ்மறை யோதினர். அகரம் சிவாசாரியார் பாடசாலை ஆதிசைவ மாணவர்களைப் பரீட்சித்து மகிழ்வுற்றனர். ஷை பாடசாலை ஆசிரியர் பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார், அமிர்தேஸ்வர சிவாசாரியார்மீது காவயபஞ்சரத்ன சுலோகங்கள் கூறினர். தமிழ்மறையோதிக் கூட்டம் நிறைவேறியது.

சிவன்மலை:— காங்கயத்திலிருந்து மூன்றுமைலிலுள்ள இச்சிவன்மலையில் ஆதிசைவ மஹா ஜனசபா மார்கழி கஉ சிவாஜலபதி திருச்சந்நிதியில் கூடியது. சமூக சம்பந்த சமயசம்பந்தமான விஷயங்களை ஆலோசித்துத் தீர்மானங்கள் செய்யப்பெற்றன.

பரிமணங்குடி:— சண்முகநாத சுவாமிக்கு தை அஉ கார்த்திகைநாள் தொடங்கி கஎஉ உத்திரநாள்வரை திருவிழா நடைபெறும். சிவகுசநேசச்செல்வர்கள் வந்து தெரிசித்தின்புறுக. என தருமபரிபாலகர் திரு, மு. முத்துப்பிள்ளை என்ற ஸ்ரீ சஷ்டி சுவாமிகள் திருமுகம் வழங்கியுள்ளார்.

வைரவன்கோயில்:— ஒன்பதுநகரசிவாலயங்களுள் ஒன்ருக விளங்கும் இத்திருக்கோயிலில் கார்த்திகை உகஉ தொடங்கி மார்கழி ருஉ சம்பா சஷ்டி வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்றது. சிவநேசப் பெருஞ்செல்வர்களும் தமிழ்ப் பேரறிஞர்களும் போன்பர்களும் திரளாக வந்து தெரிசித்தின்புற்றனர். ருஉ பிள்ளையார் நோன்பு கொண்டாடி வந்திருந்த நகரத்தா ரெல்லோரும் இளைமா விளக்குப் பெற்றுக்கொண்டனர்.

ஜில்லாப்போர்டு தேர்தல்:— இராமநாதபுரம் ஜில்லாபோர்டு பள்ளத்தூர் தொகுதிக்கு முதலாவது எலக்ஷன் சரியான முறையில் நடைபெருததால் இரண்டாவதுஎலக்ஷன் நடைபெற்றதில் கனம் செட்டிநாட்டுராஜா அவர்களின் மாப்பிள்ளை, திருவாளர், க. வெ. சித. வேங்கடசலச் செட்டியாரவர்கள் அதிகப்படியாக நானூற்றொரு உரிமைச்சீட்டுகள்பெற்று வெற்றியுற்றனர். அவர்களின் தீவிரமுயற்சியையும் திருவருளால்அவர்கள் முயற்சி ஈடேறி வெற்றிபெற்றதையும் பாராட்டுகிறோம்.

காந்தியார் பேச்சு:—ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல் ஆகியவைதான் சுயராஜ்யம் பெறவேறு. நானும் சவஹரும் தூக்கு மேடையேறத்தயார். நாம் இராஜப்பிரதிநிதியிடமாவது பாராளு மன்றத்திற்காவது செல்ல அவசியமில்லை; அவர்களே நம்மிடம்வருவார்கள்; இராஜப்பிரதிநிதி வந்து நானும் எனது கோஷ்டியினரும் இந்நாட்டில் இன்னும் இருக்கலாமா? அடுத்த கப்பலிலேயே சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட வேண்டுமா? என்பர். நீங்கள் போகவேண்டாம்; நீங்களும் உங்கள்கோஷ்டியினரும் எங்கள் தேச நிலைக்குத் தக்கவாறு நடந்துகொள்வதாயிருந்தால் இங்கேயே சுகமாக வாழலாம்; குடியேற்றச்சட்டம் எதுவும் இயற்ற நாங்கள் விரும்பவில்லை என்போம். என்கிறார். மதிமயக்கமா? மனோவேகமா? வெறியா? மனக்கோட்டையா? ஆகாயக் கோட்டையா அடிகளின் அடியார்கள்தான் அறிவிக்கவேண்டும்.

காங்கிரசு:— 50வது ஆண்டு பெய்ஸ்பூர் கிராமத்தில் 1936 டிசம்பர் 27 28 தேதிகளில் ஸ்ரீமான் பண்டித சவஹர்லால்நேரு அவர்கள் தலைமையில் மிக்க பேராரவாரத்துடன் நடைபெற்று முடிவுற்றது. மாளவியாஜீ தான் சாவாமுன் விடுதலை வேண்டுமென்கிறார். சத்தியமூர்த்தி அரசாங்க சட்டங்களைத்தகர்க்கும் வழி கூறுகிறார். டில்லியில் மன்னர் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதில்லை என்றும், ஏப்ரல் 1உ ஹர்த்தால் அனுட்டிப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. இந்தக் கூட்டத்திற்கு நூறாயிரம்பேர் கூடினர். அடுத்த காங்கிரசு குஜராத்தியில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீகாசிநாட்டுக்கோட்டைநகரசத்திரம்:— இதன் வரவுசெலவு ஐந்தொகை பவ ஆவணி உஉஉ முதல்யுவதை ௬௦உரை மானேஜிங்சொசைட்டி காரியதரிசி ரெங்கோன் சுப. க. அ. லெட்சுமணன் செட்டியாரவர்களால் அச்சியற்றி வெளியிட்டு வரப்பெற்றோம். தரும நிலயங்கள் பலவற்றின் வரலாறுகளும், வரவு செலவுகளும், நடைமுறைகளும், ஆடிட்டர் அறிக்கையும் திருப்திகரமாக விளக்கப் பெற்றிருக்கிறது.

காஞ்சிபுரம்:—சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முப்பத்தோராவது ஆண்டு நிறைவிழாவும், சைவர்மகாநாடும்கச்சபேசராலயத்தின் அணித்தாக ஸ்ரீ நாராயண சேவாச்சிரமத்தில் அமைத்துள்ள சிவஞானப் பந்தரில் தூத்துக்குடி சைவப்பிரகாச அச்சுக்கூட ஆட்சியரும், சைவசித்தாந்தப் பேராசிரியருமாகிய சைவத் திருவாளர், ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமையில் இன்று முதல் மூன்று நாட்கள் வரை நடைபெறுகின்றது. இதன் சார்பாக சைவ இளைஞர் மகாநாடு சென்னை, கிருத்துவக்கல்லூரி உதவித் தமிழாசிரியர் சைவத்திருவாளர், பூரிபாக்கம் ஆலாலசு[illegible] செட்டியார் எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். திருக்கோயில் வழிபாடு, திருமுறையோதல், வரவேற்பு, அரியபெரிய புலவர் பெருமக்களின்விரிவுரைகள், காரியக்கூட்டம், நிர்வாகர்களைத்தேர்தல், தீர்மானங்கள் யாவும் சிறப்பாக நடைபெறும். மெய்கண்டார் கழகத்தினரும், திருநெறித் தமிழ்க்கழகத்தினரும், காஞ்சி சிவதலயாத்திரையாக மார்கழி உ௦உ காலை எ இ மணிக்குமேல் ஆலடிப்பிள்ளையார்கோயில் தெருவில் ஆதீபிதீசத்தில் வழிபாடாற்றி, சைவசித்தாந்த மகாசமாஜத்தினரையும்கூட்டி, பெருஞ்சொற்கொண்டல் புரிசை, திருவாளர் சு. முருகேச முதலியாரவர்களைக்கொண்டு காஞ்சிப்புராணம் ஆதீபிதீசப் படலம் பிரசங்கிக்கச் செய்வார்கள். எல்லாம் இனிது நிறைவேற சிவம்பரம் பொருள் திருவருள் பாலிப்பாராக.

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.



# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர்
சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

(10-ம் ஆண்டு 88-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்தெரியவில்லையா! கெடுமதி கண்ணுக்குத் தோன்றுமா! கண்ணைத் திறவுங்கள் திறவுங்கள்! போலி நாகரீகமுற்ற மேனாடு எல்லாவற்றிலும் வயிற்றுப் பிழைப்புக்காகக் கல்வி கற்றுங் கோடிக்கணக்கான பேர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் அதனாற் கலகமும் விளைவதைக் கவனியுங்கள். ஜீவகாருண்ணியமற்ற நாகரீகம் நாகரீமேயாகாது. அது வீண் மயக்கமே. அதுஎம்போலியரை மயக்கத்தக்கதன்று. ஆகவே இந்துமதம் போதிக்கிற மாதிரிவேதாகமங்கட்குக் கட்டுப்பட்டுக் கூடியவரையிலொழுகி இந்திர பதவி சந்திர பதவி பிரம்மபதவி வைகுண்ட பதவி கைலாயபதவி சிவலோக பதவி சுத்தாத்வைதமுத்தி முதலியவற்றை யடைந்துபேரின்பத்தினை நுகர முன்னேற்றமடைதல்வேண்டுமா? இல்லைச்சிற்றின்பத்தினையே கருதி நவநாகரீகமாகிய போலி நாகரீகத்திலீடுபட்டுப் பின்னிறங்க வேண்டுமா? யாது வேண்டுங் கூறுமின். மாங்கனியோ எட்டிக்கொட்டையோ எது இஷ்டஞ் சாற்றுமின். ஆகவே நவநாகரீகத்தைப் பின் பற்றினால் ஓர் காலத்தும் ஈடேற முடியவே முடியாது. பின்னால் நம்கதி அதோகதிதான். அது சத்தியமே. கைப்புண்ணுக்குக் கண்ணாடியா! இறுதியாக நம் பராசர ஸ்மிருதியானது,

"பதிதர்களுக்கு ஒரு நுகத்தடியும் மாதவிடாயானவட்கு இரண்டும் பிரசவித்தவட்கு மூன்றுஞ் சண்டாளனுக்கு நான்கு நுகத்தடியும் விலக வேண்டும்" என்றும்,

முற்கூறிய அளவைவிடக் கிட்டே நெருங்கினால் உடுத்த துணியுடன் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். மேற்கூறியவர்களைத் தெரியாமல் தொட்டால் அப்படி ஸ்நானஞ் செய்வதோடு சூரியனைத் தரிசிக்கவேண்டும்" என்றுங் கட்டளையிட்டு விச்சிராந்தி யடைகின்றது.

## சண்டாளர் என்போர் யார் என்பது.

ஸ்மிருதிகளிற் சூத்திரனுக்கும் பிராமண ஸ்திரீக்கும் பிறந்தவன் சண்டாளன் என்று கூறப்பட்டிருப்பது பலரும் அறிந்ததொன்றே. அவ்வாறே அமரகோஷமும், "சூத்திரனாற்பிராமண ஸ்திரீக்குப் பிறந்தவன் சண்டாளன் ஆவான்" என்று கோஷிக்கின்றது. வாசஸ்பத்யமும், "சூத்திர

ஆணும் ப்ராஹ்மணப் பெண்ணும் கலந்துண்டாக்கிய கலப்புச் சாதி. அதொரு ஜாதி" என்று கூறுகின்றது.

ஆட்சேபம்:— இப்போதிருக்கும் தீண்டாதாரெனப்படுவோரெல்லாம் அவ்வாறே உண்டானவரா?

சமாதானம்:— இப்போது பிரத்தியட்சமாக ஐரோப்பியருக்கும் இந்தியாவிலுள்ள தீண்டாத ஸ்திரீகளுக்கும் உற்பத்தியாய்விட்ட ஒரு நூதன ஜாதி, பறங்கிக்காரர், சட்டைக்காரர் (East Indians) என்றழைக்கப்பட்டு அந்த வம்சத்தில் அளவற்றவர்களாக ஆய்விட்டது போன்றும், பரதகண்டத்தை விட்டு மேற்கேபோய்விட்டவர்களெல்லாம் யவனர்களாகி, டியூடானிக் சாதியினராகிக் கிரீக், ரோமன், ஜெர்மன், பிரஞ்சு, சாக்சன், ஜியூட், ஆங்கில்ஸ் என்றாகிச் செல்டிக் ஜாதியினராகிப் பூர்வீகத்திற் பிரிட்டனிலிருந்த பிரிடன்களோடு சேர்ந்து ஆங்கிலோசாக்ஸன் ஜாதியாகி மொத்தத்தில் ஆங்கிலேயர் என்ற பெயரையடைந்து இப்போது எண்ணிறந்தவர்களாய்ப் பெருகிவிட்டது போன்றும் சண்டாளர்கள் பெருகிவிட்டார்களென்று கொள்ளத்தக்கது. இந்தியாவை விட்டு மேற்கேபோய் ஆசாரங்கெட்டு மாட்டிறைச்சி முதலியவற்றை யுண்டு பல வகையாகக் கலந்துபோனவர்களெல்லாம் எப்படி 'மிலேச்சர்களென்றும் ஹூணர்களென்று மழைக்கப்படுகின்றனரோ அவ்வாறே ஈண்டுந் தீண்டாதார்கள் அனாதி காலத்திருந்து பெருகிச் சண்டாளர் என்றழைக்கப்படுகின்றனர். பிற்காலத்திலுண்டாகியவரே பெருகிவிட்டனரென்றால் முற்காலத்துண்டாகிய சண்டாளர்ஏராளமாயிருக்கக்கேட்பானேன்? எப்போது சரித்திர ஆராய்ச்சிக்குவந்தோமோ அப்போது உள்ளதை உள்ளபடியன்றோ வெளிப்படுத்தல்வேண்டும். மறைத்தால் மோசஞ்செய்வதாகாதோ? ஆகவே அனாதிகாலந்தொட்டு அந்தச்சண்டாளர்எனப்படுவோர்எல்லோரும்இயல்பாயுள்ளகாமப் பெருக்காற்சூத்திர ஆண்களுக்கும்பார்ப்பினிகட்கும் உண்டாகிவிட்ட பிரதிலோமக் கலப்புச்சாதியாகி அவர்களுக்குள்ளேயே பல பாஹிய ஜாதிகளாகிப் பிரிந்து, கொள்வன கொடுப்பன வெல்லாம் அவர்களுக்குள்ளேயே வைத்துக்கொண்டு சேரியிலோர்புறம் ஒதுங்கி வாழ்ந்து உயர்ஜாதி இந்துக்களைத் தீண்டாதிருந்துவரல் காண்க. இன்னும் ஆங்கிலேயர் முதலாயினோர் பர்மா சீனா மலேயா முதலிய எந்நாட்டுக்கேகினும் சிலர் அந்நாட்டு ஸ்திரீகளை மணந்து மக்களைப்பெற்று ஆனந்தித்து வருதலும் பிரத்தியட்சம். இதை ஒருவரும் மறுக்கமுடியாது. அவ்வாறே சென்னை முதலிய விடங்களில் மகம்மதியர் தீண்டாதாரிடம் ஒரு விஷயத்திற் பேதமற்றவராய் அத்தீண்டாதார்வகுப்பு ஸ்திரீகளைத்தங்கள்வீட்டில் ஜலந்திரட்டல் சமைத்தல் முதலிய வேலைகளில் அமர்த்திக்கொண்டு நெருங்கிப் பழகுவதாற் காமமேலிட்டு அப்பெண்களுக்குக் காதை நிறையக் குத்தித் துலுக்க ஸ்திரீகளாக்கிக் கலந்து நாளடைவில் அநேக பிரஜைகளை உண்டாக்குவதும் பிரத்தியட்சமே. இவர்களெல்லாம் பிறகு மகம்மதியர்களாகி விடுகிறார்கள்.



ஐதர் திப்புக்சலகத்தாலும் அரங்கஜிப்பின் கொடுமையாலும் அக்பரின் நயபலத்தாலும் தென்னிந்தியாவிலுள்ள அநேக தமிழர் தெலுங்கர் மலையாளிகள் மகம்மதியர்களாகிவிட்டபோதிலும் பூர்வீக பாஷையே பேசுகிறார்கள். அவ்வாறே வடநாட்டிலும் அநேகர் மகம்மதியர்களாகிவிட்டு இந்துக்களின் பழக்க வழக்கங்களை உடையவர்களாயிருத்தலின் ஆரிய சமாஜத்தார் மீட்டும் இந்துக்களாக்கி விடுகிறார்கள். சென்னையிலும் அவ்வாறே அடாத பிரசாரஞ் செய்து வருகின்றனர். இம்மாதிரியாகப் பலவித கலப்புண்டாகாமலிருக்கும் பொருட்டே தீண்டாமை ஏற்பட்டதென்றறிக. மாங்காயிலும் பல தினுசுகளும் உருசிபேதங்களும் குணபேதங்களும் அவ்வாறே நாய்களிலும் பலவகை பேதங்களும் ஏற்பட்டு, உயர்ஜாதி மாம்பழம் உயர்ஜாதி நாய் முதலியன ஏற்பட்டிருப்பதுபோல மனிதர்களிலும் உயர்வு தாழ்வு பூர்வீக கன்மபேதத்தாலுண்டாதல் நிச்சயமாதலின் பேதங்கிடையாதென்பது பேதமையே யென்க. உயர்வு தாழ்வின்றி உலகத்தில் ஓர் காரியமும் நடைபெறாமை அனுபவத்தாலும் நன்கு காண்க. எல்லாப் பிராணிகளுங் கன்மத்திற் கீடாகவே ஈசனால் உயர்வு தாழ்வாகப் படைக்கப்பட்டமையும் பிரத்தியட்சமே யென்க. சிருஷ்டியைப் பார்த்தாலே அளவிறந்த பேதமாகக் காண்பது பிரத்தியட்சம். ஒருவர் முகம்போல் மற்றொருவர் முகமில்லை. நால்வகையோனிஎழுவகைப் பிறப்பு (அசு) லட்சயோனி பேதங்களாதலையும் ஆராய்ந்தறிக. ஆகவே பேதமில்லை யென்பது யாண்டையதென்க.

## வேதத்திற் சண்டாளர் என்னும் பதம் பிரயோகிக்கபட்டமை.

சாந்தோக்யம் 5-10:—"எவர்கள் இங்குக்கெட்ட நடத்தை யுடையவர்களோ அவர்கள் அடுத்த ஜென்மத்தில் இழிந்த பிறப்பாகிய நாயாகவோ, பன்றியாகவோ, சண்டாளனாகவோ பிறக்கிறார்கள்".

பிருஹதாரண்யகம் 4-3-22:— "இந்த (ஸுஷுப்தி) நிலையிலிருப்பவன் திருடனாயிருந்தாலும்திருடனல்ல, சிசுவதைசெய்கிறவனாயிருந்தாலுஞ் சிசு வதை செய்கிறவனல்ல. சண்டாளனாயிருந்தாலும் சண்டாளனல்ல."

ஸ்ரீருத்திரம் 4-ம் அநுவாகம்:— "பக்ஷிகளின் கூட்டங்களை அடிப்பவர்கள் உருவமாயும், நாயையடிக்கும் நிஷாதர்கள் உருவமாயும் (இருக்கிற

உங்களுக்கு அடிக்கடி நமஸ்காரம். நாய்கள் ரூபமாய் இருப்பவராயும் நாய்களுக்குயஜமானர்கள்உருவமாய்இருப்பவராயும் (இருக்கிற) உங்களுக்கு அடிக்கடி நமஸ்காரம்'' நிஷாதபதமும், ஸ்வபதி என்கிற பதமும் சண்டாளன் என்பதற்குப் பரியாய நாமமாதலைக்கீழ்வரும் அமரநிகண்டாற்காண்க.

''சண்டாள, பிலவ, மாதங்க, திவாகீர்த்தி, ஜநங்கம:, நிஷாத, ச்வபச, அந்தாவாஸீ, சாண்டாள, புல்கஸ.''

## தமிழிலுஞ் சண்டாளன் என்னும் பதம் புலையன் முதலியோரைக் குறிக்குமெனல்.

''குணங்கர் வங்கர் கவுண்டர் காகதரிழிஞர் கொலைஞர் புலைஞரென்றுங் கிசையும் பெயர் சண்டாளர்க்கெய்தும்'' திவாகரம். ''குணுங்கர் புலைஞர் கீழோ ரிழிஞர் அணங்கு சண்டாளர்க்கபிதானம்மே'' பிங்கல நிகண்டு.

''கொலைஞரே களைஞர் வங்கர்
குணுங்கர் மாதங்கரோடு
புலைஞரே யிழிஞ ரேழ்பேர் பொருந்து
சண்டாளர் நாமம்'' சூடாமணி நிகண்டு.
''குணுங்கர் தோற் கருவிமாக்கள் குயிலு
வரிழிழர் மூப்பேர்'' சூடாமணி.

புலைஞர்—ஈனர், சண்டாளர், பறையர். புலைச்சேரி—பறைச்சேரி புலைப்பாடி. (அகராதி)

பறையன் — பறையடிப்போன், பறை செய்வோன். அதாவது மேளமடிப்போன், மேளஞ் செய்வோன். இதை விளக்கும் பொருட்டே வைஜயந்தி நிகண்டுங் கீழ்வருமாறு கூறுகின்றது:—

''சண்டாளன் இடுப்பிற் கச்சை கட்டிக்கொண்டு அல்லது கழுத்தில் தோலைக்கட்டிக்கொண்டு தப்பட்டை யடிப்பவன். அவன் மலத்தை எடுத்துச் சுத்திசெய்வான். சண்டாளன் அந்தாவசாயி யெனும் இவர்கள் வனத்தையுஞ் சுடுகாட்டையுங் காப்பார்கள். இவ்வாறு சண்டாளருக்குள் பல பிரிவுகளைக் காட்டல் காண்க.

## கண்ணன் உபதேசத்திற்குங் காந்தியின் கூற்றுக்கும் கடலுக்கும் கால்வாய்க்கும்போல் பெரும்பேதமெனல்.

(1) கொடியோனாகிய துரியோதனன்கூட துரோணாசாரியரிடஞ் சென்று, ''ஆசாரியரே உமது புத்திசாலி சிஷ்யனான துஷ்டத்யும்னனால் வியூகஞ் செய்யப்பட்டுள்ள பாண்டவ: சேனையைப்பாரும்'' (1-3) எனக் கூறியதாற் கீதையின் ஆரம்பத்திலேயே குருசிஷ்யக்கிரம மேற்பட்டு



உயர்வு தாழ்வு என்கிறதார தம்மியம் நிலைத்தது. (2) துருபதன் முதல் உபபாண்டவர்கள் ஈறாகப் பலபேர் மஹாரதர்கள் என்று (1-4, 5)ல் கூறப்பட்டுளது. மஹாரதன் என்றால் தனியாகப் பதினாயிரம் வில்லாளிகளோடு யுத்தஞ் செய்பவனாகையால் அதிலேயே இவர்க்குச்சந்தேகம் பிறந்து கீதையுங்கலப்புநூல்என்றற்குப்பின்னிடையார்போலும். (3) துரோணரும், கிருபரும், அசுவத்தாமரும் பிராமணர்களாயிருந்தும் தருமயுத்தஞ் செய்யத் தலைப்பட்டார்களென்பது (1-8)ல் பெறப்பட்டது. யுத்தம்செய்தவர்களெல்லாம் க்ஷத்திரியர்களாகவே காணப்படுதலின் வைசிய சூத்திரர்களுடைய பிரஸ்தாபமே காணோம். சண்டாளர்களை எப்படிச் சேர்ப்பர்? ஏகலைவன் என்கிற வேடன் குரு விசுவாசத்தால் வில்வித்தையிற் சமர்த்தனாகியுங் குரு காணிக்கையாக வலக்கைச் சுட்டுவிரல் வாங்கப்பட்டது யோசிக்கத்தக்கது.

(4) ''நான்கெட்ட சகுனங்களையுங் காண்கிறேன்'' என (1,31)ல் அர்ச்சுனவாக்கியம் பெறப்பட்டது. சகுனம் பார்ப்பதில் இவருக்கு நம்பிக்கையுண்டோ வில்லையோ! (5) அர்ச்சுனன் யுத்த களத்திற் பந்துக்களைப் பார்த்துப் பரிதபித்துச் சிவத்தினுட்கிடையறியாமலே ஜீவசுபாவத்தால் துக்கிக்கும் விஷயம் (1-28)ம் சுலோகமுதல், (1-45) வரையிற் பெறப்படுகிறது. ''ஞன்னைக் கொல்வார்களானால் மிகவும் நலம் (1,46) என்று கூறி வில்லை யெறிந்துவிட்டு ரதத்திற் சாய்ந்தான்.'' என்றதாற் காந்தியும் அதைப் பின்பற்றுகிறார்போலும். ஆனாற் சிவோகம்பாவனையுற்ற கண்ணனோ புன்சிரிப்புற்று அர்ச்சுனனைத்தேற்றி ''நீ கொண்டது போலி அஹிம்சா தருமம், மேலுக்கு ஞானம்போல் தோன்றும் வார்த்தைகளைப் பேசுகின்றனை, ஆழ்ந்து பார்த்தாயில்லை, ஆன்மாக்களெல்லாம் அநாதியே. ஈசுவரனும் அநாதியே. பாசமும் அநாதியே. ஒரே தேகத்திற் குழந்தைப் பருவமும், யௌவநமும், கிழத்தனமும் எவ்வாறோ அவ்வாறே இத் தேகத்தை ஆன்மாவிட்டாற் புதுச்சட்டை மாட்டிக்கொள்வதுபோல் மற்றோர் தேகத்தை யடைகிறான். ஆகையினால் ஆன்மா இறப்பதேயில்லை இறந்தானென்பது உபசாரம். ஒவ்வொருவனும் அவனவன் ஜாதிதருமத்தைச் செய்வதே உத்தமம்.

க்ஷத்திரியன் அவசியம் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம்யுத்தஞ் செய்யவேண்டியது வேதத்தில்விதித்த தருமம் (2-31, 32) நீ இந்தத் தர்ம யுத்தஞ் செய்யாவிடில் பாவத்தையடைவாய் (2, 33) யுத்தஞ் செய்தால் பாவமடையாய் (2-38) ஞானியாகிய ஜனகரும் கர்மத்தைச் செய்து சித்த சுத்தியடைந்தார் (3,20) சர்வலோக நாயகனாகிய எனக்குச் செய்ய வேண்டிய தொன்று மின்றேனும் உலகக்ஷேமத்திற்காக யானுங் கர்மஞ் செய்கின்றேன் (3,22) ஏனெனின் மேலானவன் எதைச் செய்கின்றானோ

அதையே உலகமுஞ் செய்கின்றது (3,21) நீ கொல்லப்பட்டாலோ ஸ்வர்க்கத்தை யடைவாய் ஜெயித்தால் உலகத்தை யாள்வாய்" ஆகையினால் யுத்தஞ்செய் எனத்தேற்றி விசுவரூபத்தைக் காட்டி அதில் முன்னமேயே எதிரிகளெல்லாம் வந்து வீழ்ந்திறப்பதையுங் காட்டி (11-29, 30) "பூமியில் அவதரித்து மனிதர்களை சம்ஹாரஞ் செய்து பூபாரத்தை நீக்கும் காலன் யான்" (11-32) "என்னாலேயே முன்னமே எல்லோருங் கொல்லப்பட்டுப்போனார்கள் நீ (கோபுரந்தாங்கிபோற்) காரணனாக மாத்திரமிரு" (11-33) எனப்போதித்து யுத்தஞ்செய்யச் செய்து (18) அக்ரோணி சேனைகளையும் மாள்விக்கின்றார். எனவே சாதுக்களைக் கொல்வதுதான் ஹிம்சையாகுமேயன்றிப் போர்க்களத்தில் யுத்தஞ் செய்வது ஹிம்சையாகாதென்பதூஉம் அது களைபிடுங்குவது போலும் கோயாகம் போன்றும் வைத்தியன் சத்திரமிட்டுக் குழவியின் தலையிலுள்ள கட்டியை யறுப்பதுபோன்றும் பேருபகாரமா மென்பதூஉம் பெறப்பட்டது. எதையுஞ் செய்கை வகையானன்றிக் கருத்து வகையாலறியவேண்டும். இல்லாவிடிற் பிரதிதினமும் கடவுள் கணக்கற்ற பேரை மாய்த்தலும் ஹிம்சையாக முடியும். காந்தியின் கருத்துப் பிரகாரங் கொண்டாற் கண்ணனையும் இராமனையுங் கூட எத்தனையோ கோடி நரகத்தில் வீழ்த்தவேண்டிவரும். பளாபளா! காத்தற் கடவுளுக்கே தாம்பூலம் பிடிக்கின்றார்கண்டீரிவர்! இன்னும்,

ஒருகுலம் நாசமடைந்தால் அநாதியாயிருக்கிற குல தர்மங்கள் முழுதும் நாசமடையும், ஆசாரங்கள் கெட்டால் குலமுழுவதும் அதர்மங்கள் வியாபிக்கும்;

ஹே கிருஷ்ணா அதர்மம்மேலிட்டாற் குலஸ்திரீகள் கெடுவார்கள் கற்பழிந்து விடுவார்கள். பெண்கள் கெட்டால் ஜாதிக் கலப்புண்டாகும்.

"ஜாதிக் கலப்பானது குலநாசஞ் செய்தவர்களுக்கும் குலத்திற்கும் நரகத்தையே யுண்டுபண்ணும், இதுவன்றியும் இக்குலநாசத்தை யடைந்தவர்களுடைய பிதுருக்கள் பிண்டோதகத்தை யிழப்பதால் நரகத்தில் விழுவார்கள். குலத்தைக் கெடுத்தவர்களுடைய ஜாதிக்கலப்பைச்செய்த இந்தப் பாவங்களால் அநாதியாயுள்ள வர்ணாச்ரமதர்மங்களுங் குலாசாரதர்மங்களும் அழிந்துபோய்விடும்" என்கிற கீதாவாக்கியங்களாற் குல தர்மத்தை விடுவதாலும், வியபிசாரத்தாலும் ஜாதிக் கலப்புண்டாகிப் பலவித கீழ்ச்சாதிகளேற்பட்டு நரகத்திற் காளாகின்றனர் எனப் பெறப்படுவதேயாக கலப்புச் சாதிகிடையாதென்பதும் ஸ்திரீகள் கற்புத்தன்மை கெட்டுப் புனர்விவாகஞ் செய்துவியபிசார தோஷமடைந்து நரகத்திற்காளாகச் செய்வதும் ஹிம்சையோ அஹிம்சையோ. இதுதான் கீதையோ! மேற்கூறிய அர்ச்சுன வாக்கியமிருக்கக் கண்ணனும்,



"நான் கர்மத்தைச் செய்யாமற்போனால் இந்த ஜனங்களும் (என்னைப் பார்த்துக்) கெட்டுப்போவார்கள் (அதனால்) ஜாதிக் கலப்புக்குங் கர்த்தா ஆவேன். இந்த ஜனங்களைக் கெடுத்தவனாவேன்," என்பதுங் காண்க. இன்னும்,

"ப்ராஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரரென்கிற நான்கு வர்ணங்களும் என்னாலே குணங்கள் கர்மங்களாகிய பலவித பாகத்தினால் உண்டுபண்ணப்பட்டன. அந்தக்குணகர்ம பாகமாகிய சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய நான் கர்த்தாவல்லவென்றும் நாசமற்றவனென்றும் அறி" என்கிறார். எனவே ஆன்மாக்களின் கர்மத்தின் பேதத்தினாலேயே நான்குஜாதி வித்தியாசமாகச் சிருஷ்டித்தமை என்னுடைய இஷ்டம்போல் அக்கிரமமாகக் குரங்கு சேஷ்டை செய்யமாட்டேன் என்பதும் ஆதிசிருஷ்டியில் நான்கு ஜாதிகளே யென்றும் ஆனால் ஆன்மாக்களுக்கநாதியான ஆணவமலத்தினாலும் அதனாலுண்டாகிய காமக் கொழுப்பாலும் பின்னாற் பலவித கலப்புச்சாதி உண்டாகி விட்டதென்றும் பெறப்படுதல் காண்க."

இதைப் பின்வருமாறு ஸ்தாபிக்கின்றார்:— ஹே அர்ச்சுனா! பெண்களும் வைசியர்களும் சூத்திரர்களும் அப்படியே எவர்கள் நீசஜன்மங்களுடையவர்களாவரோ அவர்களுங் கூட என்னை விசேஷமாகச் சேவித்து உத்தமமான பதவியை நிச்சயமாயடைகிறார்கள். (௯-௩௨.)

"அதற்கே யப்படியானால் புண்ணியவான்களாயும் பகவத்பக்தியுடையவர்களாயுமுள்ள ப்ராஹ்மணர்களும் அப்படியே இராஜரிஷிகளும் தியானாப்யாசத்தால்உத்தமகதியை யடைவார்களென்றுசொல்லவும்வேண்டுமோ? அநித்யமானதும் சுகமற்றதுமான இந்த லோகத்தில் புருஷார்த்த சாதனமாகிய இம்மானிட ஜன்மத்தை (அத்ருஷ்ட வசத்தால்) நீ அடைந்ததால் என்னைச் சேவிப்பாயாக." இவ்விரண்டுசுலோகங்களால் நான்கு ஜாதிகளும் அவற்றிற்கு வேறாகப் பாபயோனியிலுதித்த ஐந்தாம் ஜாதியும் நன்கு பெறப்பட்டமை காண்க. பாபயோனி யென்பது ஸ்மிருதியால் விளக்கப்படுகின்றதாதலின் சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி ஈண்டு விரிக்காதொழிந்தாரென்க.

பிரகிருதியைதானாகஎண்ணியிருக்கும் ஜீவன் தேகத்தினாலுண்டாகிற குணங்களை அநுபவிக்கிறானல்லவா? (நான், எனதென்னும் அகங்கார மமகாரங்களாலுண்டாகும்) சுகதுக்க முதலிய விஷயாசக்தி இந்தச் சீவனுக்குப் புண்ய பாபங்களான யோனிகளிற் பிறப்பையடையக் காரணமாயிருக்கிறது," என உயர்குல இழிகுலப் பிறவிப் பேதத்திற்குக் காரணத்தையுங் காட்டிவிட்டார். இன்னும் பேதமில்லையென்று வாய் திறக்கலாமா?

இராஜசகுணம் மேலிட்ட காலத்து மரணமடைபவன் காம்ய கர்மத்திற் பற்றுள்ளவர்களிடம் ஜனிக்கிறான். அப்படியே தாமசகுணம் மேலிட்ட காலத்து மரணமடைந்தவன் மூடர்களான மூர்க்கர்களுடையகர்ப்பங்களிற் பிறக்கிறான் என்றார். ஆறு(14-14)ம்சுலோகத்திலுஞ்சத்வகுண மேலிட்ட காலத்து மரணமடைபவன் உத்தமஞானிகளுடைய பரிசுத்தமான உலகங்களை யடைகிறான் என்றார். இம்மூன்று சுலோகங்களாலும் ஜாதி பேதங்களையும் உயர்வு தாழ்வுகளையும் நன்கு காட்டுகின்றார். மேலும் இம்மூன்று சுலோகங்களால் மரண காலத்தில் அருகே யிருப்பவர்கள் மரிப்பவனுக்குச் சத்வகுணங் கிஞ்சித்தும் அழியாதபடி கடவுளின்மேற் பலவித ஸ்தோத்திரங்களைச் சொல்லிச் செவியிற்பஞ்சாட்சரத்தையோ அஷ்டாட்சரத்தையோ ஓதல் வேண்டுமென்றும் அழக்கூடாதென்றும், யானே தாம் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன்" என்றபடி மரணகாலத்தில் எமவாதை மற்றெல்லாவற்றினுங் கொடிதாயிருக்குமாதலின் ஓர் தொந்தரவுஞ் செய்யக்கூடாதென்றும் அருகிலிருப்பவர்கள் அசுத்தர்களாயுங் கொடும் பாவிகளாயுமிருந்தால் அவர்கள் மேற்பற்று சென்றாலும் ஈனப் பிறவிகளை யடைவார்களென்றும் இன்னும் ஈனர்களுடைய பலநாட் சகவாசத்தால் அவர்களுடைய உருவமே மரண காலத்துந் தோன்றி அடுத்தாற்போல் நரகமனுபவித்துப் பிறகு அந்த இழிந்த ஜென்மத்தையுமடைவரென்றது சத்தியமென்றும் அது ஜடபாதர் சரிதையால் நன்கு விளங்குமென்றும் ஆகவே தீண்டாமை அவசியமென்றும் ஸ்தாபித்தாராயிற்று.

புழுவானது ஒன்றைப்பற்றிக்கொண்டு மற்றொன்றைவிடுஞ் சம்பிரதாயமும் ஈண்டுக் கவனிக்கற்பாலது. இந்த நடப்புகளெல்லாம் இதர மதங்களில் இல்லாமையும் அறியத்தக்கது. மேலும் ஐரோப்பியர்களோ அவர்களது சர்ச்சு (Church)களிலேயே பிணத்தை வெகுநேரம் வைக்கின்றனர். பிணத்தீட்டு அவர்களுக்கில்லை. குளிப்பதுமில்லை. குளிக்காமலே பூட்ஸ்காலோடு சர்ச்சுக்குப்போய் விடுகின்றனர். குளிர் என் செய்வது பாவம்! சீனர், பர்மியர் முதலியோருக்குந் தீட்டில்லை. மகம்மதியர்களோ பிணத்தை ஒருவர் மாற்றி யொருவர் தூக்கிச்செல்கின்றனர். டிராம் வண்டியிலும் அருகிலும் சர்வம் செகநாதமாய் விடுகிறது. இதற்குக் கேள்வி முறையில்லை. சட்டமுங் காணோம், ஐரோப்பிய ஸ்திரீகள் முதலாயினோர் உருது காலத்தில் வீட்டுக்குத்தூரமாயிருப்பதில்லை. தீட்டுமில்லை. குளிக்காமலே ஏதோ பஞ்சை வைத்துக்கொண்டு கவுனை (gown) மாட்டிக்கொண்டு தொப்பியைக் கவிழ்த்துக்கொண்டு, பாவங் கஷ்டத்தோடு வேலைக்கேகி வயிற்றுப்பிழைப்புக்காக பாடுபடுகின்றனர். நம்முடைய பெண்களும் அந்த அனுசாரத்தைப் பின்பற்றி அவதிக்குள்ளாகி புருஷன் சம்பாத்தியத்திற் சுகமாய் சாப்பிட்டு நல் விஷயங்களை ஆராய்வதை விட்டுத் தாங்களுங் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துப் புருஷனை உட்கார வைத்து அவனுக்குச் சோறு போடாவிடில் உதைகுத்து வாங்கப் பார்க்கின்றனர்போலும். வேலையகப்படாவிடிற் சினிமாவில் நாய்போல் இழுத்துத் திரிந்து மானத்தைச் சற்றுக் காட்டி வயிறு வளர்க்கப் பார்க்கின்றனர் போலும்! ஏனோ இந்தக் கஷ்டம்! 'விநாசகாலே விபரீத புத்தி' என்பது பொய்க்குமா! ஆனால் நம்முடைய ஆசாரம் எப்படிப்பட்டதென்றால் எடுத்ததற்கெல்லாந் தீட்டு தான். (தொடரும்)

உ

# நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும்?

(காஞ்சிபுரம், சைவபுராணிகர், திரு, அ. க. பொன்னுசாமிமுதலியாரவர்கள்)

கடவுள் இல்லை யென்று வாதிக்கும் நாத்திகர், கடவுளை உண்டென்று வழிபடும் ஆத்திகர்களை நோக்கி, ஏன் கடவுளை வழிபடவேண்டும்? சீவகாருண்யம், கொல்லாமை, பிறர் பொருளிச்சியாமை, சாந்தம், ஈகை, வாய்மை முதலிய நற்குணங்களால் தூய்மையடைந்திருந்தாற் போதாதா? ஏன் பெருஞ் செலவிட்டுக் கோயில் கட்டிப் பூசை உற்சவாதிகள் செய்யவேண்டும்? ஏன் பட்டினி கிடந்து விரதங்களை யநுட்டித்துத் தேகத்தை வாட்டவேண்டும்? ஊர் ஊராய் சுற்றித் திரிந்து தலயாத்திரையும், தீர்த்தயாத்திரையுஞ் செய்தல் வேண்டும்? கோயில் கட்டாவிட்டால் கடவுளிருக்க இடமில்லாமல் மழை, வெய்யல், பனி, காற்றுகளால் வருந்துவரோ? பொங்கல், புளியோதனம், ததியோதனம், வடை, பாயாசம் முதலிய அறுசுவை யுணவை அவருக்கு நிவேதிக்காவிட்டால் அவர் பட்டினி கிடந்து உடலிளைத்துவிடுவாரோ? அவரை அவ்வாறு பூசிப்பதனால் அவருக்கு விருப்பும், பூசியாதொழியின் வெறுப்புமுண்டாகுமோ? அவையுண்டாயின் அவர் விருப்பும் வெறுப்புமுடைய சீவராசிகளிலொருவராவரன்றோ? என்பனவாதிய கேள்விகளைக் கேட்டுப் பரிகசிக்கின்றார்கள்.

நம்முன்னோர்கள் பலகாலம் பல நூல்களையாய்ந்தும், அநுபூதி ஞானம் வாய்க்கப்பெற்றும் தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெறவேண்டு மென்னும் கருணை மிகுதியால் சுருதி, யுக்தி, அநுபவவாயிலாய் கடவுள் இலக்கணம், ஆன்ம விலக்கணம், கடவுளை வழிபடுமார்க்கம் ஆகிய இவைகளை விளக்கி ஞானசாஸ்திரங்களையியற்றியது, மன்றி அவைகளிற் கூறியாங்கு ஒழுகியுங் காட்டியுமிருக்க இவர்கள் வெகு இலேசாக வாய்ச்சொல்லால் அவர்கள் செய்துகாட்டிய சமயவொழுக்கங்களைப் பழிக்கின்றார்கள். இவ்வாறு பழித்தலைக் கேட்டுச் சைவ நூல்களைக் கல்லாத பலர்பதில் சொல்லமாட்டாதவர்களாயிருக்கிறார்கள். உலகத்தில் கடவுள் ஒருவருண்டு என்று நம்பி வழிபடுகின்ற சைவ முதலாம் சமயங்கள் எண்ணிறந்தன. சைவசமய, சைவசாஸ்திரவுணர்ச்சியிருப்பின்விடை பகர்தலெளிதே. ஏனைய சமயங்கள் கூறுங்கடவுளிலக்கணம், ஆன்ம

யிலக்கணம், முத்தியிலக்கணம் முதலியவற்றைக்கொண்டு நாத்திகர் கேட்கும் வினாக்களுக்கு விடை பகர வியலா. சைவ சாத்திரங்களைக் கொண்டு அக்கடாக்களுக்கு விடையளிப்பது எளிதாயிருந்தும், சைவ சமயிகளுள் சமய நூலறிந்தவர்கள் மிகச்சிலரா யிருத்தலால் நாத்திகம் பிறதேயங்களில் மாத்திரமன்றி நம் நாட்டிலுந் தலைவிரித் தாடுகின்றது. ஆதலால் நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும் என்னும் வினாவுக்கு சுருதி, யுத்தி, அனுபவவாயிலாய் பின்வருமாறு விடையளித்தலே ஏற்றபெற்றியாம்.

நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும் என்னுங் கேள்வியிலுள்ள நாம் என்பது யாது? அதின் இலக்கணங்கள் யாவை? கடவுள் எனப்படும் பொருள் யாது? அதின் இலக்கணங்கள் யாவை? வழிபாடாவது யாது? வழிபாட்டின் கிரமம் எத்தன்மைத்து என்பவற்றை யொருவன் உணரப்பெறின், அவன் நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும் என்னும் கேள்விக்குத் தக்க சமாதானத்தைத் தானே உணரப்பெற்றவனாவன். இவைகளை யாராய்ந்துணராதவனே அக்கேள்வியைக் கேட்டுத் தானுமிடர்ப் பட்டு பிறரையும் இடர்ப்படுத்துவான்.

உண்மை, அறிவு, இன்பம் என்னும் இம்மூன்றும் உலகத்திலுண்டு என்பதை மறுப்பார் ஒருவருமில்லை. இம்மூன்றின் நிலைக் களமே கடவுள் அல்லது சிவம் எனப்படும். எப்பொருள், எக்காலத்தும் இல்பொருளாகாமல் உள்பொருளாய் அழிவின்றி நிலை பெற்று மற்றெல்லாப் பொருள்களும் தன்னிடத்தினின்றும் தோன்றித் தன்னிடத்திலேயே ஒடுக்கப்பெறுமோ அப்பொருளை சைவசாத்திரங்கள் முறையிடுந் தனிமுதற்கடவுளாம். எப்பொருள், அறிவு மயமாயிருந்து எல்லாவுயிர்களின் அறிவை விளக்குமோ அப்பொருளை வேத சிவாகமங்கள் கூறுஞ் சிவபரம் பொருளாம். எப்பொருள், எல்லா வுயிர்களும் அனுபவிக்கும் இன்பத்திற்கிடனாய் வரம்பிலின்பமுடையதா யிருக்குமோ அப்பரம் பொருளே சைவத் திருவாளர்கள் வழிபடும் முழுமுதற் பொருளாம். ஆதலால் கடவுள் அல்லது சிவம் எனப் படுவது நாத்திகராலும் மற்றெல்லாச் சமயத்தினராலும் ஒப்புக் கொள்ளப் படும் உண்மை, அறிவு, இன்பம் என்னும்இவைகளின் நிலைக்களமே



யன்றிப் பிறிதொரு பொருளன்று. சைவ நூல்கள் சிவபரம்பொருளைச் சச்சிதானந்தம் என்று உரைப்பதனாலும் இவ்வுண்மை விளங்கும். சச்சிதானந்தம் என்பது சத்து, சித்து, ஆனந்தம் எனப் பிரிந்து உண்மை, அறிவு, இன்பம் என்று பொருள் பயக்கும். இவற்றுள் உண்மையாவது: எக்காலத்தும் இல்பொருளாகாமல் உள் பொருளாய் தோற்றக்கேடுகளின்றியிருத்தல். அறிவாவது: (சர்வஞ்ஞத்துவம்) முற்றுணர்வு. இன்பமாவது: வரம்பிலின்பம்.

இனிஉயிர்களின் தன்மையைநோக்குவோமாயின் இவை வரையறுக்கப்பட்ட ஆயுளையும்அறிவையும்இன்பத்தையும் உடையனவாகவும், தாம்பெற்றவற்றினும்மேம்பட்ட ஆயுளையும்அறிவையும்இன்பத்தையும் விரும்புவனவாகவும், அவ்விருப்பம் முற்றுதல் வேண்டி முயல்வனவாகவும் இருக்கின்றன. இது பற்றியே உயிர்கள் இச்சா ஞானக் கிரியைகளையுடையன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. இதை எவரும் மறுக்க முடியாது. உயிர்கள் மேம்பட்ட ஆயுளையும், அறிவையும், இன்பத்தையும் நாடிச்செல்லச் செல்ல அவை அளவு கடந்து மேன்மேலும் சென்றுகொண்டே இருத்தலால், தாம் பல காலும் செய்துகொண்டிருந்த முயற்சிகளால் மிகவும் இளைத்துக் கடைசியாக அவை யெல்லையற்று உயர் வொப்பின்றி நிற்கும் நிலைக் களமெதுவோ அதனைப் பெற முயல்கின்றன. அவ்வொப்புயர் வற்ற நிலைக்களமே கடவுளின் உருவமாதலால் அந்நிலைக்களத்தை யடைய அநுசரிக்கும் மார்க்கமே 'கடவுள் வழிபாடு என்று சொல்லப்படும்.

அதனை யடைதற்குரிய வழிகள் எண்ணிறந்தனவாம். அவை யெல்லாம் சரியை, கிரியை, யோகம், ஞானம்என்னும் நான்கினுள் அடங்கும். இவற்றுள் ஞானமார்க்கமாவது: அந்நிலைக்களமாகவே விளங்குவது. யோகமார்க்கமாவது: அந்நிலைக் களத்திற்கு மிகச் சமீபத்திலிருப்பது. சரியாமார்க்கத்தைக் கடந்தே கிரியாமார்க் கத்தை யடைதல் கூடும். கிரியா மார்க்கத்தைத் தாண்டியே யோக மார்க்கத்தை யடைதல் கூடும். யோகமார்க்கத்தைக் கடந்தே ஞான மார்க்கத்தை யடைய இயலும். சரியையில் ஐம்புலச் சேட்டையும், அஞ்ஞானமும் காற்கூறு நீங்கிச் சாலோக மென்னும் இன்பமுண் டாம். கிரியையில் அவை அரைக் கூறு நீங்கிச் சாமீப மென்னும் பெரிய இன்பமுண்டாம் யோகத்தில் அவை முக்காற் கூறு நீங்கிச்

சாரூப மென்னும் மிகப் பெரிய இன்பம் உண்டாம். ஞானமாவது: அஞ்ஞானமும், ஐம்புலச்சேட்டையும் முற்றிலும் நீங்கி இன்பமாயிருக்கும் சாயுச்சிய மென்னும் நிலையாம். அஞ்ஞானமானது: செம்பினிற் களிம்புபோல் உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ மலத்தின் காரியமாயிருப்பதனால் அது ஆணவமல மென்று சொல்லப்படும்.

சரியை யிலா ணவங்கால் சரிந்திடுங்
கிரியை யிலரை மலங்கெடுதி யுற்றிடு
மருவு யோகத்தின் முக்கான் மடிந்திடும்
விரிசிவ ஞானத்தின் முற்றும் வீயுமே.

ஆதலால் உயிர்கள் தாம்பெற விரும்பும் பேரின்பத்தை யடைவதற்கு முதலில் அநுட்டிக்கவேண்டிய மார்க்கங்கள் சரியை, கிரியைகளாம். ஆலயவழிபாடு, தலயாத்திரை, தீர்த்தயாத்திரை முதலியன வெல்லாம் சரியை, கிரியைகளுள் அடங்கும். ஆதலால் ஆலயங்கள் கட்டுதலும், நித்திய பூசை, நைமித்தியபூசை திருவிழா முதலியன நடத்துதலும் கடவுள் பொருட்டன்றி மனிதர்கள் தாம் ஐம்புலச் சேட்டை யடங்கப்பெற்று அஞ்ஞானத்தினின்றும் நீங்கி இன்பநிலையை யடையும் பொருட்டேயாம் என்பது விளங்கும். உயிர்கள் இம்மையில் அநுபவிக்கும் இன்பமெல்லாம் மனதை ஐம் புல வழிச் செல்ல விடுவதனால் உண்டாகும் மயக்க அறிவினால் விளைவதாம். இவ்வின்பம் உண்மையான இன்பமன்று. கானற் சலம்போல் வெறுந்தோற்ற மாத்திரமாயிருந்து துன்பமாய் மாறுவது. மனதை ஐம்புலன் வழிச் செலுத்தாமல் அறிவு மாத்திரமாயிருந்து அநுபவிக்குமின்பமே என்றும் அழியாததும் உண்மையு மான இன்பமாம்.

"மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத்
தமுதே யூறிநின்றென்னு ளெழுபரஞ் சோதி". திருவாசகம்.

(ஆதலால் புலி சிங்கம்முதலிய துட்ட மிருகங்களுக்கும், பிணி மூப்பு சாக்காடுகளுக்கும், கற்பாந்த வெள்ளங்களுக்கும் அஞ்சா வீரர்களாகிய பெரியோர்கள்புலப் பகைக்கு மிக அஞ்சுவர்.)

"புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—வனைத்துலகுஞ்



சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை" —குமரகுருபரர்.

வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யீர்த்து வெங்காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச்
சிந்தை நைந்துருகி மெய்மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன்
றூயினுங் கருணையா மன்று
ளுயகமாகி யொளி விடு மணியே
நாதனே ஞானவா ரிதியே. ——தாயுமானுர்.

சிறியோ ரைம்புலப் பகைக்கு விருந்தூட்டி அது இழுத்துச் செல்லு மிடமெல்லாம் அதன் பின்னே யோடிச் சென்று பிறவி யென்னும் துன்பக் கடலில் வீழ்ந்து வருந்துவர். பெரியோர் ஐம் புல வழிச்செல்லாமல் பத்தியென்னும் சிவிகை யூர்ந்து, சரியை கிரியை, யோகங்களாகிய வழிகளைக் கடந்து சென்று, ஞானமென் னுங் குன்றேறி நின்று, திருவருளாகியவாளைக்கைப்பற்றி ஐம்புலப் பகையை யடியோடு மாய்த்துக் காணினுங் கேட்கினுங் கருதினும் களிதருஞ் சிவானந்தச் செழுந்தேறலை யருந்திச் செம்மாந்திருப்பர்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்னும் இத்திருக் குறளானது 'நாம் ஏன் கடவுளை வழிபட வேண்டு' மென்பதை நன்கு புலப்படுத்துகின்றது. இப்பொய்யா மொழியால் பற்று என்பதொரு பொருளும், அப்பற்றோடு கூடிய தொரு பொருளும், பற்றற்றதொருபொருளும்ஆகமூன்றுபொருள் உண்டென்பதும், பற்றோடு கூடிய பொருள் அப்பொருளி னின்று நீங்குவதவசியமென்பதும், அப்பொருள் தான் பற்றிய பற்றினின்றும் நீங்குவதற்குப் பற்றில்லாத பொருளைப் பற்ற வேண்டு மென்பதும் பெறப்பட்டது.

முற்கூறிய முப்பொருளும் முறையே பாசமெனவும், பசு வெனவும், பதியெனவும் சொல்லப்படும். ஆன்மாக்கள் பாசமாகிய பற்றை யுடையனவாயிருப்பதனால் பசுக்களெனப்படும். பாசமாகிய பற்றானது அநாதி தொட்டு ஆன்மாக்களை விடாது தொடர்ந்து

பல பிறவிகளை யெடுக்கச்செய்து துன்பப்படுத்திக்கொண்டிருக்கும். ஆன்மாக்களும் அப்பாசவசப்பட்டு, அறிவும் ஆற்றலுங் குன்றி, அப்பாசகாரியமாகிய தேகாதிப் பிரபஞ்சத்தை மெய்யெனக் கருதி, அதனிடத்தில் பற்று வைத்துப் பிறந்து இறந்துழலும். இவ்வாறு ஆன்மாக்கள் துன்பப்படுதலை யுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவர், அழுக்கைக்கொண்டு அழுக்கைப் போக்குவதுபோல் அப்பாசத்தைக் கொண்டே ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களைக்கொடுத்து, அவைகளின் அறிவையும் ஆற்றலையும் விளக்கி பாசப் பற்றினின்றும் விடுவித்துத் தமது திருவடி இன்பத்தைத் தந்தருளவேண்டி ஓயாது உபகரித்து வருகிறார். அக்கடவுள் எங்கும் நிறைந்தவர் ஆயினும் "தாபர சங்கமங்க ளென்றிரண்டுருவினின்று மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்". என்பது சித்தியார். ஆகையால் அன்புடையவர்கள் கடவுளுக்கு ஆலயம் அமைத்து, நிவேதன முதலிய வைத்துவழிபடுகின்றனர். ஆதலால் பெரியோர்கள் கொண்ட கொள்கையை யிகழாது 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' 'வையந்தோறுந் தெய்வந் தொழு' என்ற அமுத வாக்கைக் கடைப்பிடித்தும், நால்வராதியர் சென்று வழிபட்டுப் பாடப் பெற்ற தலங்கள் இன்றுஞ் சிறந்திருத்தல் கண்டும் கடவுளைப் பரிகசித்தலின்றி நாம் கடவுளை வழிபடவேண்டுவதே. 'நாம் என் கடவுளை வழிபட வேண்டு'மென்றால் அடிமைகளாகிய நாம் ஆண்டவனாகிய கடவுளை வழிபட்டு அருள்பெற வேண்டுமென்பதே விடையாம்.

திருச்சிற்றம்பலம்.

முழுத்தழன் மேனித் தவளப்பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை யெங்கள்பிரானை யிகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம்மாற் றொழுவிக்குந் தொண்டரையே.

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே.

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

திருச்சிற்றம்பலம். —திருநாவுக்கரசர்.

உ

# சிவநேசன் வாழ்த்துமாலை.

(கம்பை, ரெட்டியார் உயர்தரக் கல்விநிலையத் தமிழ்ப்பண்டிதர்
திரு, வ. மு. இரத்தினேசுவரையர் அவர்கள்.)

1. சிவப்பணியே செம்மைத் திருப்பணியென் றோதுஞ்
சிவநேசன் வாழி சிறந்து.

2. ஆர்த்த பிறவிதெற வான்ற பெருநெறியை
வேர்த்துடலம் வீழாமுன் மேவுதற்கு—நீர்த்தண்
டுளிவீழ் சடையுடையான் றாயதிருப் பாதம்
அளிகொண்டு வாழ்வே மறிந்து.

3. ஆறணியுஞ் சடையுடையா ரருள்சமய வகைநாடி
அன்பிற் கூடி
வீறுபெறு தமிழ்மொழியால் வியன்பெருமை தனைப்பாடி
வேத வாய்மை
கூறுமரும் பொருளுண்மை குறிகொண்ட வாற்றொழுக்கிற்
குறைவு றாது
தேறமொழி "சிவநேசன்" திகழ்பத்தாம் ஆண்டதனில்
செழித்து வாழ்க.

4. கற்றார் புகழுரை தாங்கிநம் நாத்திகர் காண்வரவே
பற்றாய்ப் பதிப்பொரு ளுண்மை பகர்ந்துயர் பண்புடைத்தாய்
நற்றா யெனத்தரு பேர்ராமசாமிப் பெருந்தகையும்
நற்றா ரணிமீது நல்வள மார்ந்து நலம்பெறவே.

5. போற்றுவம் வம்மின் போற்றுவம் வம்மின்
ஆற்றோ டிதழி யணியொரு முதலருள்
தேனூ றுகத் தேக்கெறி நகராய்
வானாட் டவரும் வழுத்தும் பலவான்
குடியெனும் பொற்பதி கொழுவிய தீபமாய்
வடிவே லெடுத்த வானவ னருடர
மன்னிய குன்றை வைகிய செவ்வேள்
தன்னருள் பாயவுந் தழைத்தது மப்பதி

ஈங்கு:—

சிவநே சர்க்கொரு செழுஞ்சூ ரியன்போல்
சிவநே சன்வரச் சிறந்தது ஞாலமே
மாந்தர் மனவிரு டுமிக்கு மாண்டன்
ஏந்துபல் வசனமு மியையக் காட்டித்
தமிழ்க்கரு வூலமாந் தகுதி சிவணித்
தமிழ்நாட் டொப்பிலாத் தண்ணளிக் குன்றாய்
நேமிசூ ழுலகில் நிறைபுகழ் நாட்டிய
சாமி நாதசற்குரு முதலோர்
நூல்வளங் காட்ட நுண்ணிய நூலும்
பால்பற் றறுத பரசிவத் திறனும்
பவமகல் பண்பிற் பாங்குற வூட்டி
நவநவ மான நயம்பல துதையக்
கற்றோர்க் கின்பக் காட்சி யளித்து
மற்றோர் மனத்துள் மாசு மகற்றும்
சுத்த செந்தமிழ் மெத்து பத்திர
வித்தகச் சிறுவன் விளங்கு கின்றனன்
பத்தாம் ஆண்டு பரவுதற் கேப்பது
இத்தரை வாழு மெழிற்பெருஞ் செல்வீர்
ஆற்றலு மறிவு மமைகுண நண்பீர்
போற்றுவம் வம்மின் போற்றுவம் வம்மின்
சாற்றரும் புகழிற் றிளைக்குதிர் சரதமே.

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

(பரிமணங்குடி, திரு, மு. முத்துப் பிள்ளை என்கிற ஸ்ரீ சஷ்டிச்சுவாமிகள்)

மாமயில் முகில்கண் டகவுபூஞ் சோலை
வளப்பல வான்குடி மருவி
நேமக வொளிசெய் மதிச்சிவ நேச
நிலவுதாள் பரப்பியெந் நாளுஞ்
சேமமுற் றிருக்கத் தென்குடித் திட்டைச்
சிவபிரான் மகிழ் திருப்பணிசெய்
ராம. கு. ராம. ராமசாமிப் பேர்
நயகுண னூழி வாழிய வே.